உ

பரமபதிதுணை

சுப்பிரமணியர்

ஞானம் ௨௱.

டி. சாரதா புத்தகசாலை அதிபர்

த. துரைசாமி முதலியார்

அவர்களால்

புவனேஸ்வரி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1925 [அணா 8.

...டன் தெரு, மின்ட் போஸ்ட், மதராஸ்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 JUL 1925
MADRAS

R6
N25
181984

உ

பரமபதிதுணை.

சுப்பிரமணியர்

ஞானம் உ௱.

இஃது

மதுரை வித்துவான்

த. குப்புசாமிநாயுடு அவர்களால்

பார்வையிடப்பட்ட

பிரதிக்கிணங்க,

சுத்தப் பதிப்பு.

T.S. DORASAMY MUDALIAR BOOK SELLER

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No.
22 JUL 1925
MADRAS

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 JUL 1925
MADRAS

மதுரைப் புதுமண்டபம் புத்தகஷாப்

இ-ரா-ம. குருசாமிக் கோனார்

அவர்கள் விருப்பத்தின்படி

த. துரைசாமி முதலியார்

அவர்களால்

புவனேஸ்வரி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

விலை] 1925. [அணா 8.

உ

கடவுள் துணை.

அகத்தியருக் குபதேசித்த

சுப்பிரமணியர் ஞானம் உா.

அண்டபரா பரமான பரையின்பாதம்
ஐயனெங்க ளாதிவஸ்து பதமும்போற்றி
தொண்டர்கள்மெய்ஞ் ஞானியுட பதமும்போற்றிச்
சொல்லுமுப தேசமிரு நூறுதன்னை
மண்டலிகர் மகாயோகி மதிக்கவென்று
மருவில்லா ஞானமதை மாட்டுவேன்யான்
கண்டபடி கண்டகோ டாலியாகக்
கணக்காக ஞானமதைக் காட்டுவோமே. (1)

காட்டுகிறேன் பூரணமே வெளியதாகக்
சலங்காமல் வெளியினுட பதமும்போற்றி
பூட்டுகிறேன் ரவிமதியைக் காண்பதற்குப்
புகழ்பெரிய நாதாக்கள் பாதம்போற்றி
நாட்டுகிறேன் மெய்ஞ்ஞானம் வெளியதாக
நல்வினையுந் தீவினையு மிரண்டும்போகப்
பூட்டுகிறேன் திறவுகோல் திறந்துதானும்
புத்தியுள்ள பிள்ளாய்நீ பேணிக்கேளே. (2)

கேளடா அகஸ்தியனே கிருபையாகக்
கெடியான பராபரமே யொன்றேதெய்வம்
ஆளடா அதுநிலையை யறியவேணும்
அண்டசரா சரங்களெல்லாந் தெரியவேணும்
நாளடா பூரகத்தி லேறவேணும்
நல்வினையுந் தீவினையும் போக்கவேணும்
காளடா கருவுகளைக் கொல்லவேணுங்
காலனையுங் கட்டறுத்துக் கொள்ளுவாயே. (3)

கொள்ளடா வாசியொன்றே முத்தியாகுங்
கொடியதொரு மற்றலமு முத்தியில்லை
அள்ளடா வாசிதனை யடுத்துமைந்தா
ஆதிவஸ்தை யனுதினமும் மனதில்வைத்து
மெள்ளடா மறுபடியும் யோகம்பார்த்து
மேன்மையுள்ள ஞானமதை மேவிக்கொள்ளு
வள்ளடா வல்லவனுக் கண்டீராகில்
வஸ்தான வஸ்துவுமே வாய்க்குந்தாமே. (4)

தாமடா வாசியென்ற குதிரையேறி
தத்துவந்தொண் ணூற்றாறு தனையறுத்து
ஓமடா ஓங்காரத் துள்ளொடுங்கி
ஓம்நமசி வாயமென்று மனதிற்றங்கி
நாமடா நமனுடைப்பட் டணமுந்தாண்டி
நாதாந்தச் சுடரிலே நாடிச்சென்று
வாமடா வாமத்தைக் கண்டுபோற்றி
வாலையெனும் பராபரையை மனதிற்றங்கே. (5)

தங்கியே மனதிலேயும் நிலையாய்த்தங்கித்
தமர்திறக்கும் வாசலுட கதவுகண்டு
அங்கியே ஆறுதல மடுத்தேயேறி
ஆதிவஸ்தை யனுதினமு முன்னுட்கொண்டு
ஏங்கியே யீராறு தலமுந்தாண்டி
யிடகலையும் வலகலையும் அழியச்செய்து
பங்கியே பரமான நதியுந்தாண்டிப்
பச்சைமயி லேறியுந்தான் பாடுவாயே. (6)

பாடவே கின்னரியு மாலின் வீட்டிற்
பகல்வத்தி தீவட்டி பகல்போற்றோணும்
ஆடவே யைந்தெழுத்து மதிலேதோணும்
அப்புறமுஞ் சங்குதொனி யறிவாய்க்கேட்கும்
நாடவே தமர்திறக்கும் வாசல்தோணும்
நந்தியுட வீற்றிருப்பும் நட்புந்தோணும்
வாட்டவே வச்சிரமணி விளக்குந்தோணும்
வாலையுட சிலம்பொலியும் வாய்க்குந்தானே. (7)

வாய்க்குமடா மனதழுக்கை யறுக்கவேணும்
வஞ்சமெனும் புத்தியையும் மாய்க்கவேணும்
ஏய்க்குமடா யேய்ப்பான பேச்சையெல்லாம்
ஈட்டியக் கண்டுமுத விறுத்தவேணும்
நாய்க்குமடா நாய்போலே திரியவேணும்
நல்லோரைக் கண்டாக்கால் வணங்கவேணும்
பேய்க்குமடா பிராணனையும் போற்றவேணும்
பிரபலங்கள் பண்ணுமற் பிலத்துமில்லே. (8)

நில்லடா ஒருமனதாய் நிலையில்நில்லு
நித்தநித்தம் பிராணயம் நீனவாய்க்கூட்டு
அல்லடா கற்பமதை யறிந்தேயுண்ணு
ஆறுவரை யூடுருவி யடுத்தேயேறும்
வல்லடா வாசியைத்தான் மேலேநோக்கும்
வயிரமங்கே யிருக்கின்ற வகையுங்காணும்
அல்லடா யிப்படியே அறிந்துகொண்டு
ஆதிவஸ்தை யனுதினமு மறிவாய்போற்றே. (9)

போற்றடடா கற்பமுண்டா லெனைப்போலாவாய்
பூருவத்தின் ஞானமெல்லாம் பொருந்தத்தோணும்
ஏற்றடா சிங்குவையும் பிடித்துமைந்தா
யென்மக்காள் நித்தமுந்தான் பிசங்கூட்டி
வாற்றடா பதின்மூன்று வருஷந்தானும்
மைந்தனே கற்பமதை மனதிற்கொள்ளு
சாற்றடா சரவணையு முனக்குத்தோணும்
சண்முகந்தா னென்றுசொல்லிச் சாற்றலாமே. (10)

சாற்றலாம் வேல்முனையு முனக்குச்சித்தி
தவப்பொருளு முந்தனுக்குச் சடிதிற்கிட்டும்
ஏற்றலாம் நமன்கயிற்றை யறுத்துப்போடும்
ஈராறு தலந்தாண்டி யிருக்கலாகும்
வாற்றலாம் வச்சிரம்போற் றேகமாகும்
வழக்கான கருவிகளை மாளப்பண்ணும்
போற்றலாம் பூர்வகன்ம வினைகள்போகும்
பொல்லாப்பு ஆனதெல்லாம் போகுந்தானே. (11)

தானென்ற யென்குருவே அருளிச்செய்தீர்
சடாட்சரனே சண்முகனே தயவாய்நீயும்
நானென்ற நற்குருவே விட்டுச்சொல்லும்
நலமான கற்பவகை நடப்புச்சொல்லும்
ஊனென்ற வாசியுட ஒழுங்குஞ்சொல்லும்
உன்முனையைக் காணுகிற ஒளியும்சொல்லும்
வானென்ற வானவர்க்கு வலியநாதா
வடிவேலா யிந்தவகை மாட்டுவீரே. (12)

மாட்டுகிறேன் யென்மகனே மாணுகேளு
மகத்தான கற்பமென்ற மார்க்கஞ்சொல்வேன்
பூட்டுகிறேன் சிகாரமென்ற நெல்லிச்சேரு
புதுமையுள்ள மகாரமென்ற நீருஞ்சேரு
ஆட்டுகிற ஆதிவஸ்தை யதிலேசேரு
யடங்காத யென்றுயாள் வஸ்துஞ்சேரு
நாட்டுகிற நாளையுந்தா னென்றதாக
நலமான தேவியைத்தா னட்டுவாயே. (13)

நாட்டடா நாற்கோண முன்னேயிட்டு
நவவட்ட மிட்டேயறு கோணமிட்டுப்
பூட்டடா முக்கோண மதின்மேலிட்டுப்
புகழான பிறைவட்ட மேலேபோட்டு
மாட்டடா யென்றுயாள் முகந்தான்வைத்து
மதிக்கவே ஆறெழுத்தை அதிலேசாத்தி
வாட்டடா கற்பமதை மனதில்வைத்து
வாலைதனைப் பூசைசெய்து வணங்கிக்கொள்ளே. (14)

கொள்ளவே நாதாக்கள் சாபந்தீருங்
கொடியதொரு வஞ்சகங்கள் குதித்தேயோடும்
அள்ளவே யாருதல மடுத்துத்தானும்
ஆயியுட பாதமது அறிவால்வாய்க்கும்
மெள்ளவே வாசியைத்தான் வாங்கிமைந்தா
மேன்மைபெற வேணுமென்று மனத்திற்றங்கி
வள்ளவே வஞ்சகத்தைக் கட்டறுத்து
மகத்தான கற்பமதை வணங்கிக்கொள்ளே. (15)

கொள்ளவே மும்மூலங் கொண்டேயானுங்
குமரனென்றே யெந்தனுக்குப் பேருமாச்சு
அள்ளவே ஆயிரத்தெட்டி தழுங்கண்டேன்
ஆறுகற்ப மகாரமுந்தா னடக்கிக்கொண்டேன்
வள்ளலே வயிரத்திரு விளக்கைக்கண்டேன்
வாலையுட சிலம்பொலியு மதிக்கப்பெற்றேன்
நள்ளவே நாதாந்தச் சுடரிற்சொக்கி
நாலைந்து வாசலையு மடைத்திட்டேனே. (16)

அடைத்திடவே சிலம்பொலியுங் கேட்டேன்யானும்
ஐயையா காதிரண்டு மடைத்துப்போச்சு
படைத்திடவே ரோசமென்ற வெக்கம்போச்சு
பரிவான மயில்மீதிற் பாய்ந்துசென்றேன்
வடைத்திடவே வாசியின்மேற் சொக்கிக்கொண்டேன்
வயிரமங்கே யிருக்கின்ற வகையுங்கண்டேன்
முடைத்திடவே மும்மூலங் கொண்டதாலே
முருகனென்று யெந்தனுக்குப் பேருமாச்சே. (17)

பேராகி யூராகிப் பெரிதுமானேன்
பேசாத வஸ்துவென்று பேருங்கொண்டேன்
ஆருகி யருபவுரு வெளியுமானேன்
அழியாத வஸ்துவென்று அருளும் பெற்றேன்
நேராகி நிர்மலனுய் நிர்மதியுமாகி
நீங்காத பொருளாகி நிறைந்தேன் நின்றேன்
பாராகிப் பருமலையாய்ப் படர்ந்தேயானும்
பச்சைமால் மருகனென்று பகர்ந்திட்டாயே. (18)

பகர்ந்திட்டார் பாராபரமு மானசோதி
பதிவான மெய்ஞ்ஞானம் பகர்ந்தேசெய்தார்
அகர்ந்திட்டார் அம்மூலம் உபதேசித்தார்
ஆறுவரை யூடுருவி அரியச்சொன்னுர்
இகர்ந்திட்டா ரீராறு தலமுஞ்சொன்னுர்
இரவிமதி சோலையிலே இருக்கச்சொன்னுர்
தகர்ந்திட்ட விந்துவையுங் கட்டச்சொன்னுர்
சண்முகந்தா னென்றுசொல்லிச சாற்றினுரே. (19)

சாற்றினார் மேல்மூலத் தருவுஞ்சொன்னார்
சராசரங்க ளுள்ளதெல்லாஞ் சார்ந்தேநின்றேன்
ஏற்றினா ரெனதுபிரா னெனக்குமைந்தா
யெல்லையில்லாப் பேரொளியை அறியச்சொன்னார்
வாற்றினார் வஸ்தோடே வஸ்தாய்நிற்க
வாசியென்ற வடிவேலை வருந்தித்தந்தார்
ஆற்றினா ரரூபமாந் தன்னிலேதான்
அடங்கியே அனுதினமும் வாழ்ந்திட்டேனே. (20)

வாழ்ந்திட்டேன் புருவமைய மதனிற்சென்றேன்
வாசியென்ற வடிவேலை வாங்கிக்கொண்டேன்
ஈழ்த்திட்டே னிருவிழியை அடக்கிச்சென்றேன்
இயலான நந்தியிலே யிரங்கிவாழ்ந்தேன்
தாழ்ந்திட்டேன் சங்கரற்குப தேசஞ்சொன்னேன்
தாயான வஸ்துவையுந் தாங்கியுண்டேன்
ஆழ்ந்திட்டேன் ஆதிவஸ்தைக் கண்டுகொண்டேன்
அதினாலே ஆறுமுக னென்றுபேரே. (21)

பெற்றபேர் ஒருவராற் சொல்லப்போமோ
பேதையென்று மனதிலேயம் வைக்கப்போமோ
அற்றபே ரழிகுழியில் வீழ்கப்போமோ
ஆருயிரும் வேறென்று நினைக்கப்போமோ
சித்திபெறத் தீவினைகள் செய்யப்போமோ
தெருவீதி யெங்குந்தான் திரியப்போமோ
அற்றபேர் ஆரூபந் தன்னைப்போற்றி
அழகான சுடலெரியுஞ் சொக்கியேறே. (22)

ஏறடா பதின்மூன்று வருடமைந்தா
யென்மகனே மும்மூல மெண்ணிக்கொண்டு
காரடா கருவிகளை கொன்றுதானுங்
கருஞ்சாரை ரெண்டுமுதற் களற்றிநீயுஞ்
சேரடா சிங்கென்ற மௌனம்பூட்டித்
திரிபுரையை யனுதினமும் நெஞ்சில்வைத்து
நேரடா நித்தமுந்தான் வீசங்கூட்டி
நேர்மையுடன் பரகெதியில் நீஞ்சுவாயே. (23)

நீஞ்சலாய் நிமிஷத்திற் பெற்றுநீயும்
நிலையான பொருள்தன்னை நினைத்துக்கொண்டு
பாஞ்சுபார் வாசியென்ற பதியிலேறிப்
பராபரத்தை யனுதினமும் செஞ்சில்வைத்து
ஆஞ்சுபா ரைந்தெழுத்தை நெஞ்சில்வைத்து
அனுதினமு மும்மூல மறிவாய்க்கொண்டு
வாஞ்சுபார் வாசியைத்தான் நாட்டஞ்செய்து
வளக்கான பெண்ணாசை மனத்திற்றள்ளே. (24)

தள்ளடா படுகுழியில் விழுகாதப்பா
தாயான சிற்பரையை மறவாதப்பா
அல்லடா பதின்மூன்று வருடமட்டும்
அழகான போகமுந்தான் அறிவாற்றள்ளு
மெள்ளடா கடுகொடுநல் லெண்ணெயுந்தான்
மேவியே தள்ளடா விரைந்துசொன்னேன்
நள்ளடா பதின்மூன்று வாண்டுசென்றால்
நலமான விந்துமுதற் கட்டும்பாரே. (25)

பாரென்று பராபரனே பகர்ந்துசொன்னீர்
பதிவான மும்மூலம் போக்கச்சொன்னீர்
ஆமென்ற தத்துவத்தை யடக்கச்சொன்னீர்
ஆயிழையாள் போகமதை யகற்றச்சொன்னீர்
நானென்ற வாசியுட நாட்டஞ்சொன்னீர்
நாதாந்தப் பேரொளியின் நட்புஞ்சொன்னீர்
காரென்ற யோகத்தைக் கலந்து சொல்லுங்
கருவான மந்திரத்தைக் காட்டுவீரே. (26)

காட்டுகிறே னறிவுள்ள பிள்ளாய்கேளு
கருவாகப் பதின்மூன்று சென்றபின்பு
ஆட்டுகிற அம்மென்று மௌனமூட்டி
ஆதிவஸ்தை யனுதினமு மறிவாய்க்கொண்டு
நாட்டுகிறேன் பதினெட்டு மாதமைந்தா
நலமாக வோரிடத்தில் நாடிநின்று
கூட்டுகிற குருபதத்திற் கூக்கலிட்டு
கூசாமல் மௌனத்தைக் கொள்ளுவாயே. (27)

கொள்ளவே பாசிபய றாகுமாகுங்
குருவைநெல் பச்சரிசி தானுமாகும்
மெள்ளவே ஆவின்பால் தன்னிற்பொங்கி
மெய்ஞ்ஞானம் வேணுமென்று விரும்புநீயுந்
தள்ளவே நித்தமொரு நேரங்கொள்ளு
தப்பாமற் பசிதானும் தளர்ந்துபோகும்
விள்ளவே யோகமதை விரும்பிப்பாரு
மெய்ஞ்ஞானி யென்றுவெளி யேறலாமே. (28)

ஏறலா மாயிரத்தெட் டிதழும்தோணும்
என்மகனே அமுதமுந்தான் குமுளிபாயும்
மாறெலாம் விந்துவது கட்டிப்போகும்
அசையாத மணிபூரக மடங்கிநிற்கும்
பாரெலாம் பருமணியாய் வலுத்துப்போகும்
பச்சைமயி லுந்தனுக்குப் பகர்ந்துயீவார்
நேரெலாம் பரகெதியு முனக்குக்கிட்டும்
நித்தியமு மமுதந்தா னுண்ணலாமே. (29)

உண்ணலா மதைவிட்டாற் கற்பமில்லை
ஒருமணியாய்த் திரட்டிவைக்கு முறுதியாகத்
திண்ணலா மதுவல்லோ கற்பங்கற்பந்
தீவினைகள் தானகற்றுந் திடமாயச்சொன்னேன்
நண்ணலாம் ஆசிநடு வீதிதோணும்
நாலைந்து வாயலையு மடைத்துக்கொள்ளும்
கண்ணலாங் கருவிழியுஞ் சொருகிப்போகும்
காரணசற் குருவென்று கருதுவாரே. (30)

கருதவே யென்குருவே தடமுஞ்சொன்னீர்
காரியமாய் வாசியைத்தான் அடக்கச்சொன்னீர்
அருதவே யாறுதலந் தெரியச்சொன்னீர்
அப்பாலும் போகமதை யடக்கச்சொன்னீர்
பொருதவே யெப்படித்தான் வாசிதன்னைப்
போதரவாய்க் காணுகிற புகலுஞ் சொல்லுங்
கருதவே மும்மூலம் பிரித்துச்சொல்லுங்
கருவூரிற் காங்கயனே கருவாய்த்தானே. (31)

கருவாகச் சொல்லுகிறேன் மாணகேளு
கருவான குண்டலியை மேலேனேக்கி
உருவாக மேனேக்கிப் பார்க்கும்போது
உத்தமனே பிடரிவழி யுயர்ந்துவோடும்
மருவாக நித்தமுந்தான் பிசங்கூட்டு
அப்பனே வருடம்பதின் மூன்றுமட்டும்
குருவாக நீயறிந்து கூர்மைபாரு
குருவறிய வாசியுந்தான் குதியாதென்றே. (32)

குதியாது குறுகாது உடல்தானப்பா
கூர்மையது நீளாது குறையாதப்பா
அழியாது உடல்தானு மூப்பாதப்பா
அரூபசுடர் தன்னிலே அறிவாய்க்கூட்டும்
பதியாது பதியிரவி மேலேனேக்கும்
பலபல விதங்களெல்லாம் பாழாப்போகும்
நதியாது நதிச்சாரை கட்டிப்போகும்
நமனுடைய நிலையெல்லாம் நாசமாமே. (33)

நாசமறப் பண்ணுமடா மும்மூலங்கொண்டால்
நல்வினையுந் தீவினையு மிரண்டும்போகும்
பாசமறப் பண்ணுமடா வஸ்தையுண்டாற்
பலபல புத்திபெலாம் பாழாய்ப்போகும்
வாசமரப் பண்ணுமடா வாசிநாட்டம்
வழக்கான சுழிமுனையும் வாரிக்கொள்ளும்
தூசமறத் துரியமுந்தான் தூர்ந்துபோகுந்
துவாதசாந் தத்திலேறி தொழுதுநில்லே (34)

நில்லடா வாக்குமன மொன்ருய்நில்லு
நிட்சயத்தைப் பற்றியினி நிலைவாய்நில்லு
அல்லடா ஆறுதலங் கடந்தீரானல்
ஆயிரத் தெட்டுமாதத் தழகுமுண்டு
வல்லடா வாசியைத்தான் மேலேனேக்கு
மைந்தனே கீழ்நோக்க மாட்டாதப்பா
அல்லடா யிதையறிந்து செய்தீரானல்
ஆத்மாவும் நீயாச்சு யையாபாரே. (35)

பாரப்பா மும்மூலம் பகரக்கேளு
பாழான அன்னமுந்தான் பொசித்தீரையா
ஆரப்பா மூன்றுபங்கு சுழிந்துபோச்சு
ஆத்மாவும் உன்னைவிட்டு அகன்றுபோகும்
நேரப்பா மூன்றையுந்தான் கொண்டாயானல்
நிட்சயமாய் மும்மூலம் நிலையிதாகும்
காரப்பா ஆத்மாவுங் கழன்றுபோகார்
கள்ளனையும் ஒருநிலையில் கட்டலாமே. (36)

கட்டலாங் கபடற்ற சித்தனுவாய்
கைலாய தேகமடா கருணையாகும்
வெட்டலாங் காலனையு மிரட்டிமைந்தா
வேல்முனையி லேறிவிளை யாடலாம்நீ
தட்டலாந் தமர்திறக்கும் வாசல்தோணுந்
தாயான சிற்பரையுந் தனதேயாவாள்
முட்டலாஞ் சூரசங் காரஞ்செய்து
முடிக்கலாங் கருவிகளை முடிக்கலாமே. (37)

முடிக்கலா முச்சுடரின் தைலத்தாலே
முதலான மனக்குளிகை முறையாய்மைந்தா
தட்டலாம் நாதாந்த (நந்தி) தன்னிலேறி
தனதான வுறன்முறையைச் சண்ணிப்போடு
கட்டலாங் காமத்தைக் கருவாய்மைந்தா
காரணமா மும்மூலங் கருணையாலே
நட்டலாம நாதமணி ஒன்றதாக
நலமாக வஸ்துவுட நாட்டந்தானே. (38)

நாட்டமுடன் கும்பகபூ ரகமுமையா
நடுவான ரேசகமு மூன்றுமொன்றாய்
வாட்டமுட னென்றாகக் கயிறாய்வாங்கி
வாசையுடன் மேனேக்கி வலுவாயுண்ணு
தாட்டமுடன் சதகோடி ரவியுந்தோணுந்
தமர்திறக்கும் வாசலங்கே தயவாய்த்தோணும்
பூட்டமுடன் பூரகத்தி லேறினுக்கால்
புத்திரனே பொல்லாப்பு போகுந்தானே. (39)

போகுமடா பொல்லாப்பு சிவசெந்து
புத்திரனே மற்றதெல்லாம் நாமேயாகும்
ஆகுமடா அறுமுகனைக் கண்டோர்க்கெல்லாம்
ஆறுவகை யூடுருவி அறிவிற்சேர்க்கும்
நாகுமடா நாதமணி தானேகட்டும்
நல்வினையுந் தீவினையு மாண்டுபோகும்
மாகுமடா பராபரமு முனக்குச்சித்தி
பதிவாகப் பரியேரி நடத்தலாமே. (40)

நடத்துவா யோகமுந்தான் தாண்டித்தானல்
நலமான கும்பகத்தில் நாடிச்செல்லு
அடத்துவா யோங்காரத் துள்ளொடுங்கி
ஆதிவஸ்து வுண்டென்றும் அறிவிற்றங்கி
முடத்துவாய் முன்னணியாய்ப் பூசைசெய்து
மூதண்ட பிரமனையு மோகித்தாக்கிக்
கடத்துவாய் கரிமாலை கருவாய்க்கொண்டு
கருவிகளைச் சீரழித்து கடத்தேறுவாயே. (41)

ஏறுவா யிப்படியே ஆனபின்பு
யென்மகனே அங்கிஷ்ட மாகிப்போவாய்
தேருவாய்கற்பூரச் சுடர்போல் நிற்பாய்
தேவியுந்தா னனுதினமுந் தொண்டுசெய்வாள்
நேருவாய் பரகெதியு முனக்குக்கிட்டும்
நேரான ரவிமதியு மாண்டுபோகும்
பாருபார் பராபரனு நீயுமாவாய்
பழுதில்லாச் சித்தனென்று பகரலாமே. (42)

பகரலா மென்றுநீ சொன்னீரையா
பதிவான யோகமென்ற பதுமைசொல்லும்
அகரலா மரிபீடம் அரியச்சொல்லும்
ஐங்தெழுத் தானத்தையு மறிவாய்க்காட்டும்
இகரலாம் பிராணய மறியச்சொல்லும்
இந்திரகிரி மலையிலே யிருக்கச்சொல்லுங்
தகரலாம் நந்தியுட தனுவுஞ்சொல்லுஞ்
சண்முகனே சடாட்சரனே சாற்றுவீரே. (43)

சாற்கிறே னென்மகனே மாணுகேளு
சத்தியமா யோகமென்ற தனுவைச்சொல்வேன்
ஏற்றுகிறேன் முன்சொன்ன மௌனம்பூட்டி
யின்பமுடன் பேரொளிவு மெண்ணிக்காணும்
வாற்றடா நித்தமுந்தான் ஓண்ணரைபீஜம்
வளமான பிராணுயம் வசமாய்க்கூட்டு
போற்றடா பதினெட்டு மாதமட்டும்
புத்திரனே பிராணுயம் பொருந்திக்கூட்டே. (44)

கூட்டியே யோகமுந்தான் பார்த்தீரானல்
குறையாத பேரொளியைக் குணமாய்க்காண்பாய்
ஆட்டியே அரூபவெளி நீயுமாவாய்
ஆயிரத்தெட் டிதழ்மலரும் அறிவாய்க்காணும்
நாட்டியே அமுதமுந்தான் வடியுமைந்தா
நகரமென்ற பேச்செல்லாம் நாசமாகும்
பூட்டியே பூரணம்போ லிலங்குந்தேகம்
புதுமைசரா சரங்களெல்லாம் போக்கலாமே. (45)

போக்கலா மைந்தெழுத்தின் வகையைக்கேட்டாய்
புத்திரனே யைந்தெழுத்தைப் பிரித்துச்சொல்வேன்
ஆக்கலாஞ் சிகாரமென்ற நீருமொன்று
அப்பனே மகாரமென்ற நீருமொன்று
வாக்கலாம் உகாரமென்ற நாதமொன்று
மைந்தனே அகாரமென்ற வஸ்துவொன்று
நாக்கலாம் நாதமணி சிவந்தானென்று
நலமாகப் பஞ்சகரு யிதுதானுச்சே. (46)

ஆச்சப்பா யிதுவல்லோ கற்பங்கற்பம்
அடங்காத மும்மூலம் அருமையாச்சு
ஏச்சப்பா சொல்லக்கேள் வேறிருக்குதென்று
என்மகனே யென்னசொல்வே னிந்தமார்க்கம்
வாச்சப்பா யிதையுண்டால் வலுத்துப்போச்சு
வாசியென்ற சவ்வாரி வருகும்போது
மூச்சப்பா மூச்சற்ற யிடமுந்தோணும்
முனையான சுடர்தனிலே முழுங்கலாமே. (47)

முழங்கவே கருவிகளுங் குதித்தேயோடும்
முச்சுட்ரு மொன்ருகி முழங்கிநிற்கும்
தழங்கவே தேகமுந்தான் வலுத்துப்போகும்
தாயான சிற்பரையுந் தனதேயாவாள்
கழங்கமில்லா சுழிமுனையில் நாட்டம்வேணும்
கண்டறிந்தோன் சித்தனவ னாகவேணும்
இணங்கலா மிம்மூலங் கொண்டீரானல்
ஈசனுக்கு மேலாக விருக்கலாமே. (48)

இருக்கவடா சொல்லுகிறே மின்னங்கேளு
யிதமான பூசையுந்தான் செய்யும்போது
அருக்கவடா ஓம்நமசி வாயமென்று
ஆறுதல வீட்டினையு மடக்கஞ்செய்து
பெருக்கவடா பிராணபங் கூட்டவேணும்
பிசகாமல் சிங்குவையும் பூட்டவேணும்
நெருக்கவடா நிர்ணயமாய் நின்றீரானல்
நிசமான பரகதிக்கு நீஞ்சலாமே. (49)

நீஞ்சலா மிதைவிட்டால் கற்பமில்லை
நித்தமுந்தா னிம்மூலங் கொள்ளவேணும்
பாஞ்சாலஞ் சிகாரமுடன் மகாரம்ரெண்டும்
பத்தியுடன் அணுவளவு விட்டிடாதே
வாஞ்சலாம் பதின்மூன்று வருடங்கொள்ளு
வாசியென்ற மயில்மீதி லணைந்துநில்லு
ஆஞ்சலா மைவருந்தான் பட்டுப்போவார்
ஆன்மாவைக் காணலா மறிந்துபாரே. (50)

பாரப்பா அப்படியே உண்டேன்யானும்
பலவிதயோ சனைகளெல்லாம் பாழாய்ப்போச்சு
ஆரப்பா மும்மூல மடுத்துக்கொண்டேன்
ஆதிவஸ்தை யனுதினமும் பணிந்துகொண்டேன்
நேரப்பா யோகத்தினிலை (யாகி) நின்றுகொண்டேன்
நிட்சயத்தைப் பத்தியுட னிலைத்துக்கொண்டேன்
காரப்பா கருவிகளும் பட்டுப்போச்சு
கர்த்தனென்று எந்தனுக்குப் பேருமாச்சே. (51)

R6 N25

பேராகி ஊராகி பெரிதுமானேன்
பின்னுமுன்னு மோடுகிற தலையுமானேன்
நேராகி நிலையாகி நின்றுக்கொண்டேன்
நிட்சயத்தைப் பத்திசெய்து நிலைத்துக்கொண்டேன்
பாராகிப் பருவமதாய் பலவிதமுமானேன்
பச்சைமயி லேறியுநான் பரிந்துசென்றேன்
நாராகி நாதமுந்தா னுண்டுகொண்டேன்
நானென்று மெந்தனுக்கும் பேருமாச்சு. (52)

நானென்று பேரெடுக்க வருமோசும்மா
நாடியே மும்மூலங் கொள்ளாதார்க்குக்
காதமல்லத் தூரமல்லச் சொன்னேன்பாரு
கண்மூக்கு மத்தியிலே கருதிப்பாரு
பாகமல்லோ பரகெதியுங் கிடைக்குமைந்தா
பருமணியாய்த் தேகமுந்தான் திரண்டுபோகும்
ஆகமல்லோ ஆறுதல முருவியேறும்
அதினாலே ஆறுமுக மென்றுபேரே. (53)

பேச்சிட்டு வாயினாற் பேசினாலும்
பிழைவருமே மும்மூலம் பிரித்துச்சொன்னால்
ஆச்சிட்டு ஆதிவஸ்தை யறியாவிட்டால்
அனலாகக் கொதித்திடுமே தேகமப்பா
வாச்சிட்டு வாசியிலே யேறாவிட்டால்
வாரிவிடு முன்னையுந்தான் மைந்தாசொன்னேன்
மூச்சிட்டு முனையில்நின்று முழங்கிநீயும்
முச்சுடரா யென்றைக்கு முழங்கிநில்லே. (54)

நில்லடா மும்மூலங் கொண்டுதானும்
நிலையான வாசியைத்தா னினைத்துப்போற்று
அல்லடா கற்பமுந்தான் கொள்ளாமற்றான்
அறிவான வாசியைத்தான் யெற்றினாக்கால்
மெல்லடா தேகமுந்தான் ஒத்துப்போகும்
மேன்மையுள்ள வாசியுந்தான் குதித்துவோடும்
வல்லடா வல்லவனாய்க் கற்பங்கொண்டு
வாய்வான வாசியைத்தான் வாங்குவாயே. (55)

வாங்கியிட ரவிகுளிகை மதியில்கட்டும்
வாரிவிடும் பிரமத்தில் வளர்ந்தேசிற்கும்
ஏங்கியிட மனக்கண்ணுந் தீர்ந்துபோகும்
எல்லையில்லாப் பேரொளியு மொன்றும்வாய்க்குந்
தாங்கியிடத் தமர்ந்திரங்கும் அமுதம்பாயுஞ்
சண்டனென்ற சூரனையுஞ் சண்ணிக்கொள்ளுந்
மூங்கியிட மும்மூல மற்றுப்போகும்
முக்கியமாய்ச் சிவயோகம் வாய்க்குந்தானே. (56)

வாய்க்குமோ வாயாதோ வென்றுநீயும்
மனதிலே தயங்கியினி அலரவேண்டாம்
எய்க்குமே ஞானமெல்லா முன்னைக்கூட
யேகாந்தப் பிரமைவந்து யிழுத்துக்கொள்ளுந்
தாய்க்குமே தாய்பதத்தைப் பூசைசெய்து
தானவனைத் தானாக நிலைத்துவாழ்ந்து
காய்க்குமே கருவிகளைக் கழற்றிப்போட்டு
காரணசற் குருவைநீ கண்டுகொள்ளே. (57)

கொள்ளவே கருவிகளைக் கொன்றுபோட்டேன்
கோளற வாசியைத்தான் கூர்ந்துபார்த்தேன்
அல்லவே யறுமுனையை யறிந்துகொண்டேன்
அப்புரம் பனிரெண்டு தலமுங்கண்டேன்
வல்லவே பனிரெண்டை யடக்கிச்சென்றேன்
வாய்வான சுழல்காற்றில் மருவிச்சென்றேன்
மெல்லவே பூமலர்கள் வாசங்கண்டேன்
மேதினியைத் தான்படைத்தேன் விரித்துக்கொள்ளே.

கேளடா மேகநிறம் மூண்டுகொண்டேன்
கேணியெனும் முக்குழியைத் தள்ளிப்போட்டேன்
ஆளடா அவ்வூரி லிருந்துவாழ்ந்தேன்
அதிசயங்க ளுள்ளதெல்லா மறிந்துகொண்டேன்
நாளடா நாள்வளப்பஞ் செய்யாமற்றான்
நந்திதனி லேறியுந்தா னடனஞ்செய்தேன்
பாளடா பஞ்சபூத நிலையுங்கண்டேன்
பாய்ந்துமயில் மீதேறிப் பரிந்திட்டேனே. (59

பரிந்திட்டே னவ்வூரில் குடிபுகுந்தேன்
பஞ்சவர்னப் பாலாடை பரிந்துகண்டேன்
அரிந்திட்டே னூரி லடங்கிநின்றேன்
ஆதிவஸ்து வானதையு மறிவாற்கண்டேன்
நெரிந்திட்ட ஞானநிலை தன்னைக்கொண்டேன்
நிட்சயமாய்த் தத்துவத்தி னுறுதிகண்டேன்
அறிந்திட்டேன் வாசிவடி வேலைவாங்கி
வல்லனுக் குபதேச மாட்டினேனே. (60)

மாட்டினேன் பூருவத்தில் சித்தினாலும்
மதலையா யனுதினமு மதிக்கப்பெற்றேன்
நாட்டினேன் சிங்குவைத்தான் பிடித்ததாலே
நமனெழுத்தும் நாடிடவே நாசமாச்சு
வாட்டினேன் வாசியிலே வளர்ந்ததாலே
வாலைக்குப் பிள்ளையென்று மதிக்கப்பெற்றேன்
காட்டினேன் கருநெல்லி யுண்டதாலே
காரணசற்குருவென்று கருதலாச்சே. (61)

கருதவே புலியூரிற் புகுந்துவாழ்ந்தேன்
கபடற்ற சித்தனென்று கருதலானேன்
அருதவே ஆறுபில மடுத்துக்கண்டேன்
அதினாலே அரனுக்கு ஆசானானேன்
பொருதவே புலியூர்க்கு மேற்கேசென்றேன்
பொல்லாப்புக் களங்கமதைப் போக்கிவிட்டேன்
கருதவே மகாரமென்ற நீரையுண்டேன்
அதனாலே கர்த்தனையுங் காணலாச்சே. (62)

காணாத காட்சியெல்லாங் கண்டுகொண்டேன்
கருதவே வேடமுந்தான் கருதிக்கொண்டேன்
பூணாத ஆபரணம் பூண்டுகொண்டேன்
புகழான வேடமுந்தான் தரித்துக்கொண்டேன்
நாணாத நாணமெல்லாம் நாசமற்றேன்
நல்வினையுந் தீவினையு மிரண்டுமற்றேன்
தானான மயில்மீதி லேறிக்கொண்டேன்
தந்திமுகன் றனக்கிளைய சாமிநானே. (63)

நானான நானவனாய் நானுமானேன்
நங்கைசிவ காமிக்குத் தனையனானேன்
ஊனான உற்பனமா யுலகமானேன்
உள்வீட்டுக் குள்ளிருக்கு மொளியுமானேன்
மானான மாலயனு நானுமானேன்
மாரகதப்பச் சையம்பாள் மதிக்கப்பெற்றேன்
ஆனான அரூபவெளி ஒளியுமானேன்
ஆதிவஸ்து வானதுவும் நன்றாய்ப்பாரே. (64)

பாரப்பா உலகமெல்லாம் படர்ந்துநின்றேன்
பத்தருட பங்கிலேயும் பதியாய்வாழ்ந்தேன்
ஆரப்பா அஷ்டாங்க நிலையைப்பெற்றேன்
அரிதான மயக்கமதா யருளாய்நின்றேன்
நேரப்பா நிறைமதியாம் ஆத்தாள்வீட்டில்
நிறுத்தினின் றிருக்கையிலே நிதானங்கண்டேன்
காரப்பா கருக்கிடையுங் குருக்கிடையுங்கண்டேன்
கபாலமங்கே தூரத்திவிடுங் கண்டுகொள்ளே. (65)

கொள்ளடா நான்சொன்ன மூலம்போலே
குருவறியச் சொல்லார்கள் கூர்ந்துகேளு
அல்லடா யென்னைப்போல சொல்வாருண்டோ
அடங்காத மௌனசித்து மூலந்தன்னை
வல்லடா வல்லவர்க்குச் சொல்லிவிட்டேன்
வழிபாதை யானதொரு வகைகளெல்லாந்
மெல்லடா யிதையறிந்து மெய்ஞ்ஞானங்கொண்டால்
மேதினியிற் சித்துவிளை யாடலாமே. (66)

ஆடலா மம்பரத்தி லடுத்துயேறி
ஆயிரமு முக்கம்பத் தறிவில்நின்று
பாடலாம் பதினெட்டு இராகபாஷை
பருமணியிற் சென்றுபரி யேரிக்கொள்ளும்
நாடலாம் மானையுந்தா னுதைத்துப்போடு
நரகமென்ற பேச்சையெல்லாம் நாசமாக்கும்
காடெல்லாம் வெட்டிக்கரு வழித்துப்போடுங்
கருச்சாறை வெண்சாரை கழன்றுபோமே. (67)

கழறுகின்ற நரம்பெல்லா மிருகிப்போகுங்
கனமான மும்மூலக் கணையினாலே
அழறுகின்ற பாசமெல்லா மற்றுப்போகும்
அரூபவெளி தன்னிலே யடங்கிநிற்கும்
தளருகின்ற தாய்பதத்திற் றானேசேர்க்குந்
தத்துவந்தொண் ணூற்றாறுந் தடுத்துப்போடும்
வளருகின்ற வாய்வான யோகத்தாலே
வச்சிரமிட்ட தேகமாய் வளருந்தானே. (68)

வளருமடா யிந்தமுறை யறியவேணும்
மரகதப்பச் சையிலே வளரவேணும்
அளருமடா அழிகுழியைத் தள்ளவேணும்
ஆயிவுட அட்சரத்தைத் தெரியவேணும்
தளருமடா தாய்பதத்தைப் போற்றவேணும்
தத்தையெனும் வெளிதாண்டி யிருக்கவேணும்
கழறுமடா காமத்தைக் கட்டவேணும்
கருவிகளைக் கொன்றுகடைத் தேறுவாயே. (69)

தேறுவது லெகுவல்ல வாய்ப்பேச்சல்ல
தெளிந்துசிவ யோகியென்றாற் றேறுவான்காண்
மேருவது மோதுதல்போல் பருவமாவான்
மேலான பதவியிலே மேவிக்கொள்வான்
ஆருவது ஆசையென்ற கலக்கம்போகும்
அகஸ்தியனே உந்தனுக்கு அறியச்சொன்னேன்
நேருவது நிட்சயமும் தானங்காட்டும்
நில்வறையிற் றீபம்போல நிற்கலாமே. (70)

நிற்கலா மென்றுமே சொன்னீரையா
நிமலனுக்கு உபதேசம் நீருஞ்சொன்னீர்
எக்கலா மீராறு தலமுஞ்சொன்னீர்
யிந்திரகிரி பர்வதத்தி லேறச்சொன்னீர்
மிக்கலாம் ஆத்துமாவை என்றேயன்றி
மேதினியில் தெய்வங்க ளுண்டோசொல்வீர்
பக்குவமாய் ஞானமது பதியச்சொன்னீர்
பரவெளியி லுண்மைதனைப் பகருவீரே. (71)

சொல்லுகிறேன் என்மகனே மாணுகேளு
சூட்சமெல்லா மவனுடைய சூட்சமல்லால்
வெல்லுதற்கு வேறுமொரு விதமுங்காணும்
வெட்டவெளி யென்றுநிசம் வெளியேமைந்தா
அல்லுகின்ற ஆன்மாவே ஒன்றேதெய்வம்
அவனியிலே தெய்வமுந்தா னையாயில்லைத்
தள்ளுகிற கருவிகளைத் தள்ளினுக்காற்
றுனவனை தனக்குள்ளே யறியலாமே. (72)

அறியலாம் பூரணமே ஒன்றேதெய்வம்
அபுரூப மானதுவு மதுதானப்பா
தெரியலா மும்மூலங் கொண்டால்மைந்தா
தீவினைகள் தாநீங்கித் தெளிந்துபோவாய்
அரியலாம் வழிபாதை யிதுதானப்பா
வஸ்துவையுங் காணுதற்கு வகையிதாகும்
பரியெல்லாம் பரிபோகும் பாவம்போகும்
பரகெதிக்குப் பாய்ந்துயினி யேறலாமே. (73)

ஏறலா மென்றுசொல்லி சொன்னீரையா
யிவ்வுலகில் தெய்வகுல மென்றுசொல்லி
பேரெலாங கூடிஆ லயந்தான்கட்டிப்
பேசாத கல்லுகளைப் பிடித்துவைத்து
பாரெலாம் பூசைநை வேத்தியஞ்செய்து
பலருமே கூடியதைப் பணியலாமோ
வேறலால் அவரொருவ ரென்றுசொன்னீர்
வேல்முருகா யிந்தவகை விளம்புவீரே. (74)

விளம்புகிறே னறிவுள்ள மைந்தாகேளு
விதமாக அப்படியு மில்லாவிட்டால்
நலம்பெறவே ஞானமதைப் பார்த்துத்தானும்
நாட்டிலுள்ள ஜெனங்களெல்லாம் யோகியாவார்
தலம்பெறவே அதையறிந்து சிவனுரையா
தான்படைத்த வுலகத்தை மயக்கிப்போட்டார்
வளம்பெறவே ஞானமெல்லா முன்னுல்விட்டால்
வஸ்துவான பொருளறியா னரிதுகாணே. (75)

காணப்பா கோவிலென்றுந் தீர்த்தமென்றும்
காசினியிற் செம்பாலே விக்ரகந்தானென்றும்
பேணப்பா உலகத்தோர் தங்களைத்தான்
பேய்போலே திரிந்தலையப் படைத்தாரீசன்
நாணப்பா தேவதையைப் பணிந்திட்டாலும்
நதிகளெல்லாம் தேடிப்போய் முழுகினாலும்
ஊணப்பா உள்வீட்டுக் குள்ளிருக்கும்
மொளிவுள்ள வஸ்துவைக் காண்பரிதுகாணே. (76)

காணடா யெழுத்துதா னென்றுசொல்லே
காசினியோர் செய்கின்ற கதையைக்கேளு
ஆணடா அஷ்டான நியமஞ்செய்து
அனேகநதி தெய்வஸ்தலந் தொழுதிட்டாலுந்
தானடா தவமுமல்ல முத்தியல்ல
தானிருந்து வாழ்வோமென்று ஸ்நானஞ்செய்து
ஊனடா உருண்டவர்கள் கோடாகோடி
உத்தமனே ஞானமில்லை உறுதிக்காணே. (77)

உறுதியாய் ஞானமதைப் பாராமற்று
னுருண்டவர்கள் கோடான கோடியப்பா
அறுதியாய் ஞானமதைப் பார்க்கவேணு
மான்மாவை யனுதினமும் தேறறவேணும்
நிறுதியாய் நிட்சயத்தை யறியவேணும்
நீடூழி காலமுந்தான் வாழவேணும்
வறுதியாய் வாழ்வான கயிலைநோக்கி
வகையான மும்மூலம் வருந்திக்காணே. (78)

காணப்பா மனதடங்கி அறிவில்நில்லு
காரணமாய்ச் சற்குருவைக் கண்டுபோற்று
பூணப்பா முன்சொன்ன மூலமெண்ணு
புவனசரா சரங்களெல்லா மறிந்துபாரு
காணப்பா அப்படியே யிருந்துவாழ்ந்தேன்
கந்திதரி சனங்கண்டு நடுவாய்நின்றேன்
ஊணப்பா உலகிலுபத் திரியமற்றேன்
ஒடுங்கான கம்பத்தில் ஒடுங்கினேனே. (79)

ஒடுங்கினேன் ஓங்கார நிலையிற்குள்ளே
யுற்பனமாய்ச் சிவலிங்க முள்ளேகண்டேன்
நடுங்கினேன் மும்மூலங் கொள்ளும்போது
நாற்பத்து முக்கோணம் நடுவாய்ச்சென்றேன்
அடங்கினே னன்மாவுக் குள்ளேமைந்தா
அடங்காத சித்தனென்று அறிவுட்சேர்ந்தேன்
தடங்கினேன் நந்திதனி லேறிக்கொண்டேன்
தாய்பதத்தை யென்னாளும் போற்றினேனே. (80)

போற்றினே னெவ்வுயிரும் நான்தானென்று
புத்திரனே பூர்வகன்ம வினைகள்போக
ஏற்றினேன் முக்கோண ரவிக்குள்ளாக
வியல்பான மும்மூல மேற்றிக்கொண்டேன்
வாழ்த்தினேன் பாஷாண மூன்றுங்கொண்டேன்
வஸ்தான வஸ்தோடே வணங்கிச்சென்றேன்
கார்த்துநான் கருவிகளைக் கொன்றதாலே
கார்த்திகையீஸ் வரனென்று மெனக்குப்பேரே. (81)

ஈசனாய் எங்குமாய்ப் பரந்தேநின்றேன்
இமையார்க்கு தெய்வமா யிருந்துவாழ்ந்தேன்
வாசமாம் வாசனாய் வாழ்ந்தேநின்றேன்
வாய்த்ததொரு மூன்றெழுத்தை அறிந்துகொண்டேன்
காசினியி லியாவருமே தெளிந்துபோற்றி
கருதினேன் ஞானமிரு நூற்றுக்குள்ளே
பாசனாய் பாசமதை யறுத்துப்போட்டேன்
பச்சைமயில் மீதேறிப் பறந்திட்டேனே. (82)

பறந்திட்டேன் பராபரத்திற் பாய்ந்துயேறி
பல்லாயிரம் கோடியண்டம் பாய்ந்துசென்றேன்
அடைந்திட்டேன் அரூபவெளி தானுமாகி
ஆயிரத் தெட்டுமல ராகிநின்றேன்
நிறைந்திட்டே னிமலியுட பாதம்போற்றி
நீசனென்ற சூரனையும் நிறையாய்க்கொன்றேன்
வரைந்திட்டேன் வாய்வான காட்டினாலே
வாசியென்ற வடிவேலை வாங்கினேனே. (83)

வாங்கினேன் வேலையுந்தான் கூர்மைசெய்து
வஞ்சனென்ற யைவரையும் வதைத்துக்கொன்றேன்
ஏங்கியே சூரனையு மிறுத்திக்கொன்றேன்
இன்பதுன்ப மிரண்டையுந்தான் நீக்கிப்போட்டேன்
தாங்கியே தாய்பூசை செய்துக்கொண்டேன்
தயங்கியே ஊன்முறையைத் தகர்ந்துபோட்டேன்
ஓங்கியே ஒருநிலையா பொடுங்கிநின்றேன்
ஓம்நமசி வாயமென்று உரைத்திட்டேனே. (84)

உரைத்திட்ட ஞானமெல்லாம் பார்க்கவேணும்
உத்தமனே உலகத்தி லிருந்தாலென்ன
துரைத்திட்ட மானபொருள் தேடியென்ன
துசங்கட்டி பூவுலகை யாண்டுமென்ன
நிறைந்திட்ட மாடமும்தான் கூடங்கூட்டி
நீனிலத்தில் திரிந்ததினல் வருவதேது
பறைந்திட்ட பராபரத்தைப் பத்திநீங்கள்
பார்தனிலே நெடுநாளும் வாழவென்றே. (85)

வாழவென்று அகஸ்தியனே வகையுஞ்சொன்னேன்
வாய்த்ததொரு ஞானமெல்லா மதிக்கச்சொன்னேன்
தாழ்வென்று கேட்டால் யென்னசெய்வோம்
தமர்க்கிளையுங் கடத்தேற மாட்டாதப்பா
நாளைவந்து எமன்பிடித்துப் போனலுந்தான்
நாதாந்த சொர்க்கமுந்தான் வாராதப்பா
தாழ்வென்று நீங்களுந்தான் கெட்டுப்போனல்
தானென்ன செய்வதடா தானய்நில்லு. (86)

தானவனய்த் தன்மனமாய் நிலைக்கவேணும்
சச்சிதா னந்தவொளி தாண்டவேணும்
ஊனென்ற உலகத்தில் வாழவேணும்
உபயம திற்சிகரங் காணவேணும்
நானென்று கவி பாடினலும்
நாதாந்த பேரொளிவு நட்பைக்காணர்
ஆனென ஆதிவஸ்தை யறிந்துமைந்தா
அசுரர்கிளை தங்களையு மறுத்திடீரே. (87)

அறுக்கவே வேணுமடா மனதழுக்கை
யறுத்தாக்கா லவன்யோகி யவனேசித்தன்
பெருக்கவே பிராணுயங் கண்டுநீயும்
பிசகாமல் பிராணுயங் கூட்டிச்செய்து
தருக்கவல்லோ தாய்மதத்தைப் போற்றிசெய்து
தமர்கிளேயுங் கடைத்தேற வேணுமென்று
இருக்கவல்லோ வேணுமென்று சொன்னேனப்பா
ஈடழிந்து போனுக்கா லென்னசெய்வேன். (88)

என்னமோ யெப்படியோ வென்றுநீயும்
யிருந்தாக்கால் வாரிவிடுஞ் சொன்னேன்பாரு
வன்னமோ வாய்ப்பான மும்மூலத்தை
மைந்தனே யனுதினமு முண்டுதேரு
நன்னமே நாதாந்த அறிவிற்சேரும்
நாலேந்து வாசலே யுடைத்துக்கொள்ளு
முன்னமே சொன்னதொரு முறையைக்கொண்டு
மூதண்ட பிரமத்தில் முழங்குவாயே. (89)

முழங்குகின்ற சத்தமடா யிடிபோல்வீழும்
முச்சுடரு மொன்றுக மோதிக்கொள்ளும்
அழங்குகின்ற அறுவரையு மெடுத்தேயோடும்
அப்புரமுந் தோற்றுகின்ற ரவியும்வீசும்
மழுங்குகின்ற மனேன்மணியாள் வாசல்சென்று
மந்திரத்தைக் கட்டறுத்து மதிக்கப்பெற்று
இறங்குகின்ற வடிவாகி யிருந்துவாழ்ந்து
ஈசனுக்கு மேலாக யிருந்துகொள்ளே. (90)

கொள்ளவென்று உந்தனுக்குப் புத்திசொன்னேன்
குறையாத பரகெதியைப் பெறவேசொன்னேன்
அல்லவென்று அரிபீடம் பார்க்கச்சொன்னேன்
ஆயிரத் தெட்டுமல ரறியச்சொன்னேன்
வல்லவென்ற வாமமதை யுண்ணச்சொன்னேன்
வாய்வான சுழலிலே வாழச்சொன்னேன்
மெல்லவே மெய்ஞ்ஞானங் கூடச்சொன்னேன்
மேன்மையுள்ள பரகெதியில் மேவிக்கொள்ளே. (91)

கொள்ளவென்று யென்குருவே குமரநாதா
கொடியதொரு ஞானமெல்லாங் கூர்ந்துசொன்னீர்
அல்லவென்று தெய்வமேவே யில்லையென்றீர்
அருபமாய் நின்றபொரு ளாகுமென்றீர்
வல்லதொரு வஸ்தோடே வாழச்சொன்னீர்
வாழ்வான சுழல்தனிலே யிருக்கச்சொன்னீர்
மெல்லதொரு மெய்ஞ்ஞான ஆன்மாவாகும்
மேதினியி லிருக்கின்ற சொரூபஞ்சொல்லே, (92)

சொல்லுகிறே னென்மகனே நன்றாய்க்கேளு
சூட்சமுள்ள ஆன்மாவுஞ் சுருதிமார்க்கம்
வெல்லுகிறே னென்னாளுஞ் சொல்லக்கூடா
வெட்டவெளி யானதொரு சொருபந்தன்னை
அல்லுகிற ஆணுமல்ல பெண்ணுமல்ல
அப்பனே அலியல்ல சொன்னேன்கேளு
தள்ளுகிற பெரிதல்ல சிறிதுமல்ல
தானாக நின்றவர்கள் தன்மைதானே. (93)

தானென்ற உள்வீட்டி லிருந்தசோதி
தம்பிரான் றனையறிய வகையைக்கேளு
ஊனான முன்சொன்ன மூலமுண்டா
லுத்தமனே சோதிதனை உள்ளேகாண்பாய்
நானான நாதமதை யறிந்துகொண்டால்
நந்திகொலு விருக்குமங்கே நாடிக்காண்பாய்
ஆனான அருபவெளி தானுந்தோணும்
ஆதிவஸ்தை யறிவினா லறியலாமே. (94)

அறியவே யானுமினி கண்டுகொண்டேன்
அதினாலே யறுமுகவ னென்றுபேரு
பிரியலாம் பிருதிவியைப் பிடித்ததாலே
பேசாத வஸ்துவினால் பிரபலமுமானேன்
துரியலாந் துரியமுந்தான் துரந்துபோகுந்
துவாதசாந்த வீதியினின் றுலாவிக்கொண்டேன்
பரியலாம் பரிமீதி லேறிக்கொண்டேன்
பகல்மணிக் கொலுவில்வீற் றிருந்திட்டேனே. (95)

வீற்றிருந்தேன் வெட்டவெளி யாகவுந்தான்
வேசையர்கள் காமமதை வெறுத்துச்சொன்னூர்
பார்த்திருந்தேன் பருவணுவாய்த் திரண்டபின்பு
பாவையர்தன் மோகமுந்தான் பதிவாய்க்கொய்தேன்
ஏற்றிருந்த மோகமெல்லாம் மேலேகொன்றேன்
யென்னசொல்வே னிம்மார்க்க மிதுதான்மைந்தா
காத்திருந்து சுரோணிதத்தை மேலேவாங்கிக்
கபாலமணி வாசலையுங் கடந்திட்டேனே. (96)

கடந்திட்டே னறுசுவையுங் கழித்துக்கொண்டேன்
காரணமா மூர்த்தியென்றுங் கருதினூர்கள்
அடர்ந்திட்டே னம்பலத்தி லாடல்செய்தேன்
ஆச்சரிய மானதையு மறிந்துகொண்டேன்
படர்ந்திட்டேன் பராபரத்தோ டொடுங்கிநின்றேன்
பகலிரவு தானூகிப் பதியும்பெற்றேன்
நடந்திட்டே நடனமுந்தா நாதங்கொண்டேன்
நானூகி நீயாகி யிருந்திட்டேனே. (97)

இருந்திட்டே னெனைத்தானு மீசனென்று
எல்லோரும் போற்றவுந்தா னருளும்பெற்றேன்
மறந்திட்டேன் மனோன்மணியை நடுமையத்தில்
மாருட்ட வாசியெல்லா மறைத்துப்போட்டேன்
அறைந்திட்டேன் ஞானமெல்லாம் வுனக்கேயீய்ந்தேன்
அபுருப மானதையு மறியச்சொன்னேன்
வறைந்திட்டேன் பக்குவந்தா னிதுதானென்று
வாதான ஞானமதை நாட்டினேனே. (98)

நாட்டியடா புத்திமதி யுனக்கேசொன்னேன்
நலமில்லா காரியத்தை தவிர்க்கச்சொன்னேன்
வாட்டியடா நெஞ்சழுக்கை வாங்கச்சொன்னேன்
வயிரமங்கே யிருக்குதென்று வழியுஞ்சொன்னேன்
நாட்டியடா நாமத்தைக் கொள்ளச்சொன்னேன்
நந்திதனி லேயிருந் தாளச்சொன்னேன்
காட்டியடா கருவிகளைக் கொல்லச்சொன்னேன்
கபடசித்த சித்தனென்று வந்திட்டாயே. (99)

வந்திடவே வச்சிரவடி வேலுங்கிட்டும்
வழக்கான வாசியுந்தான் வழியாய்க்காணும்
தந்திடவே தமர்திறக்கும் வாசல்தோணும்
தாயான சிற்பறையுஞ் சித்தியாவாள்
விந்திடவே விந்துவுந்தான் கட்டிப்போகும்
வீரான வீரியமுந் தணிந்துபோகும்
அந்திடவே யதிரூப வெளியுமாவாய்
ஆதிவஸ்து நீபாவா யறிந்துபாரே. (100)

பாரப்பா கேசரியால் மவுனசித்தி
பாரிலுள்ள மும்மூலம் பகர்ந்துகொண்டால்
ஆரப்பா ஆதிவஸ்து நீதானுச்சு
யரூபவெளி தன்னிலே யடங்கிநில்லு
நேரப்பா நினைவான ஆசைதள்ளு
நித்திரையைப் போக்கியினி நினைவாய்நில்லு
காரப்பா கடம்பவனத் தருகேசெல்லு
காவலர்கள் தன்னையுந்தான் கருவாய்க்கொள்ளே (101)

கொள்ளடா மும்மூலங் கொள்ளாவிட்டால்
குருவறியக் காமமுந்தான் குதித்தேயோடும்
அல்லடா அம்மூலங் கொண்டீரானால்
அணுவளவு காமமுந்தா னசையாதையா
மெல்லடா பதின்மூன்று வருடங்கொள்ள
மேதினியிற் சஞ்சரித்து விரும்பிநில்லும்
வல்லடா வல்லவனு யோகம்பார்த்து
வாய்வான சுழல்தன்னில் வருந்திநில்லே. (102)

நில்லடா மும்மூலங் கொண்டபோது
நினைவற்று ஆசையற்றுப் பொரியுமற்றேன்
அல்லடா சாதிகுலஞ் சமையமற்றேன்
ஆருயிருனு மெனவே யாகிநின்றேன்
வல்லடா பரவிஷய மதமுமற்றேன்
வையகத்தோ ரென்னையுந்தான் வணங்கப்பெற்றேன்
செல்லடா செல்வமயி லேறிக்கொண்டேன்
சிவமான குருபதத்தைப் போற்றினேனே. (103)

போற்றினே மென்றுசொல்லிச் சொன்னீரையா
புகழான மும்மூலங் கொண்டோமென்றீர்
யேற்றினதோர் கற்பமுந்தான் தேகத்துள்ளே
யிருக்குதென்று யெம்பிரா னெனக்குச்சொன்னீர்
வாழ்த்தினதோ ரிதைவிட்டாற் கற்பந்தானும்
வையகத்தி லிருக்கின்ற வகையுஞ்சொல்லுஞ்
சாத்திநீ ரெந்தனுக்குத் தயவாய்ச்சொல்லும்
சண்முகனே அந்தவழி சாற்றுவீரே. (104)

சாற்றுகிறேன் விபரமாய் மைந்தாகேளுந்
தாரணியிற் கற்பமதைத் தெரியச்சொல்வேன்
ஏற்றுகிற தாரணியில் கற்பந்தானும்
இருக்குதென்று சொல்வதல்லா வில்லைஇல்லை
வாழ்த்துகின்ற வையகத்தோ ரோடியோடி
வாழ்வதல்லால் வேறொன்று கற்பமில்லை
போற்றுகின்ற மும்மூலக் கற்பமுண்டால்
பொய்மாய்கை தானிறந்து போகுந்தானே. (105)

போகுமடா செடிபூடு கற்பமல்ல
புகழான சரக்குவகை தானுமல்ல
ஆகுமடா அவரவர்கள் அறிவிற்குள்ளே
அடங்கிநிற்குங் கற்பமதை யுண்ணுமைந்தா
நாகமடா நாதமணி யங்கேநிற்கும்
நளினமென்ற சாரையுந்தா னுள்ளேநிற்கும்
பாகுமடா பருவமலைக் குள்ளிருந்துயேறும்
பச்சைமால் காவலென்றும் பகர்ந்திட்டோமே. (106)

பகர்ந்திட்டோங் கருநெல்லி மரந்தான்கேளு
பஞ்சைந்து மகாமென்று பகர்ந்தேநிற்கும்
அகர்ந்திட்ட வாசலது ஒன்பதாகும்
அரனுடைய காவலது ஐயாசொன்னேன்
இகர்ந்திட்ட இந்திரகிரி மரமிதாகும்
ஈராறு தலமுண்டு இதுக்குமைந்தா
தகர்ந்திட்டா லொன்றுக்கு மாகாதப்பா
தற்பரமாய்ச் சொல்லுகிறேன் சார்ந்துகேளே. (107)

கேளடா அதுபழுத்து விழுகுனித்தங்
கெடியாக அப்பழத்தை விட்டிடாதே
ஆளடா அதையெடுத்து உண்டாயாகில்
அப்பவல்லோ மும்மூல முண்மையாச்சு
மேளடா இப்பழத்தை உண்ணுவிட்டால்
மெய்ஞ்ஞானி யாகவுந்தான் மாடாய்சொன்னேன்
ஆளடா இதையெடுத்துக் கொண்டாயானல்
ஆனமாவும் நீயாச்சு அறிந்துபாரே. (108)

பாரென்று இப்படியே சொன்னீரையா
பழுதில்லா நாதமதைப் பகரச்சொன்னீர்
ஆறென்ற சாதிவகை யைந்தென்றார்கள்
அவருடைய நாதமதை யறிந்துகொள்வேன்
நீரறிய நிலையாகச் சொல்லவேணும்
நிலவரமா யெந்தனுக்கு உரைக்கவேணுங்
காரறிந்த கரிமுனையைக் காட்டவேணுங்
கபடத்து எந்தனுக்குக் கருதுவீரே. (109)

கருதுகிறேங் கருமறப்பை மைந்தாகேளு
கன்னியர்கள் சாதியுட கபடைக்கேட்டீர்
அருதுகிற சாதியைந்து வகைகளென்றீர்
அதுவெல்லா முந்தனுக்கு அறியச்சொல்வேன்
நிருதுகிற சாதிவகை யொன்றேயாகும்
நீநிலத்தி லெவரிடத்தும் நீயும்வாங்கு
பருதுகிற சாதியெல்லா மவனேயாகும்
பராபரந்தா னறியவிது பகர்ந்துவாங்கே. (110)

வாங்கடா யென்தாயை உறுதியாக்கி
மைந்தனே ஞானமதை யறிந்துகொண்டு
தாங்கடா சாதியைந்து விவரஞ்சொன்னேன்
தன்மையுந்தான் சாற்றுகிறேன் தனியாய்க்கேளு
ஓங்கடா வோடியுந்தா னிரந்துபோகா
உமைபா லுலகத்திற் றுறவுஞ்செய்தான்
தாங்கடா அதையறிய வேணுமென்று
சனங்களெல்லாந் துறந்தார்கள் சார்ந்துகேளே. (111)

கேளடா சாதிவகை யொன்றேயாகும்
    கெடியான ஜனங்களெல்லா மொன்றேயாகும்
ஆளடா நாமெல்லா மொன்றேயாகும்
    அவனிசரா சரங்களெல்லா மொன்றேயாகும்
நாங்கென்ன சாதியெல்லா மொன்றேயாகும்
    நலமான ஜாதியைத்தான் நிக்காதப்பா
வாளடா யிதையறிந்து மைந்தாநீயும்
    வஸ்தான வஸ்துவையும் பூசைகொள்ளே. (112)

கொள்ளடா யானுமந்தப் படியேசெய்தேன்
    குமரனென்று பேராகிக் கீர்த்திபெற்றேன்
அல்லடா யெனைப்போல யுண்டானால்
    ஆதிவஸ்தை யறிந்திடுவாய் ஐயாசொன்னேன்
மெல்லடா சுடரிலையுஞ் சொக்கிவாழ்வாய்
    மேன்மையென்று பரகெதியு மேவிக்கொள்வாய்
வல்லடா வல்லவனே யிருந்துநீயும்
    வஸ்தான வஸ்துவிலே வளறுவாயே. (113)

வளரவல்லோ வகைவகையாய்ப் புத்திசொன்னேன்
    வாய்ப்பான மும்மலங் கொள்ளச்சொன்னேன்
அளரலவோ அழிகுழியை மறக்கச்சொன்னேன்
    ஆருயிரு மென்று நினைக்கச்சொன்னேன்
தளரவல்லோ தாய்பதத்தை வணங்கச்சொன்னேன்
    தன்மையா யனுதினமு மிருக்கச்சொன்னேன்
கழறுகிற காமத்தைக் கட்டச்சொன்னேன்
    கரைகாணாப் பொருளதனைக் காட்டினேனே. (114)

காட்டினே மெனைப்போலே ஆசானுண்டோ
    கருநெல்லி மரத்தையுந்தான் கருதுவாரோ
பூட்டினே னென்னைப்போல் பூட்டுவாரோ
    புதுமையால் வெளிதுறந்து பொருள்சொல்வாரோ
நாட்டினே மெனைப்போல சித்தனுண்டோ
    நல்வினையுந் தீவினையு மறுப்பாருண்டோ
சூட்டினேஞ் சூரசங் காரஞ்செய்தேன்
    சுப்பிரமணிய ரென்றெனக்குப் பேருமாச்சே. (115)

ஆச்சப்பா சூரசங் காரஞ்செய்தேன்
அசுரர்கிளை தன்னையுந்தா னறுத்துப்போட்டேன்
வாச்சப்பா வாசிவடி வேலைவாங்கி
வல்லபையுந் தன்னையுந்தான் பூசைசெய்தேன்
ஏச்சப்பா பூசைதான் செய்யும்போது
யிந்திரவி யொளிவினால் பிரகாசமாச்சு
வாச்சப்பா கருவிகள்தா னிறந்துபோச்சு
வச்சிரமிட்ட காயமாய் வலுத்துப்போச்சு. (116)

வலுவாகி வடிவேலை வாங்கிக்கொண்டேன்
வாய்வான சுழல்தனிலே சொக்கிக்கொண்டேன்
அலுவாகி ஆயிரத்தெட் டிதழுங்கண்டேன்
அடங்காத சமாதியிலே அடங்கிச்சென்றேன்
நலுவாத நாதமணி நானுங்கண்டேன்
நாருச மானதையுங் கட்டிப்போட்டேன்
கருவாகிக் கருமுனையில் கறைந்தேசென்றேன்
கரைகாணாப் பேரொளியிற் கட்டுண்டேனே. (117)

கட்டுண்டே மனந்தேறிக் காணவேணுங்
காவலர்களை வரையுங் கடத்தவேணும்
அட்டுண்ட அறுசுவையைத் தள்ளவேணும்
ஆசானைக் கண்டாக்கால் வணங்கவேணும்
மட்டுண்ட மகாமேருவிற் செல்லவேணும்
மதனையா யனுதினமும் வாழவேணும்
வட்டுண்ட வகாரமிலே யறியவேணும்
வகைவகையாய்க் கருவிகளை வதைத்துத்தள்ளே. (118)

வதைத்திடவே வஞ்சகங்க ளானதெல்லாம்
வச்சிராதி மார்க்கத்தில் வாரித்தாக்கும்
அதைத்திடவே யாறுதல மெடுத்தேசென்றால்
ஆயியுட பாதமது அறிவில்வாய்க்குஞ்
சதைத்திடவே சதைநரம்பு மிருகிப்போகுஞ்
சனமான உறவின்முறை தானேமாளும்
அதைத்திடவே அரூபவெளி நீயுமாவாய்
ஆசானைப் போலவுந்தா னருளுமாச்சே. (119)

ஆச்சப்பா மாசற்ற சித்தனுவாய்
    ஆண்டசரா சரங்களெல்லா மாடச்செய்வாய்
ஏச்சப்பா சொல்லவில்லை யிந்தமார்க்கம்
    இடைப்புகளை யீடழிக்கச் சொன்னேன்சொன்னேன்
வாச்சப்பா மெய்ஞ்ஞான வெள்ளங்கண்டு
    வஞ்சகங்க ளணுவளவும் வைக்கவேண்டாம்
மூச்சப்பா மூச்சற்ற யிடமுந்தோணும்
    மூக்கியமாய் ஞானவெள்ள முழுங்குவாயே. (120)

முழுங்கவல்லோ முன்னணியாய் மொழிந்துசொன்னேன்
    மோசமில்லா முனையில்நின்று முழுங்கச்சொன்னேன்
அழுங்கவல்லோ மனத்தழுக்கை யறுக்கச்சொன்னேன்
    ஆயியுட பாதமதைப் போற்றச்சொன்னேன்
மழுங்கவல்லோ மன்மதனை யறுக்கச்சொன்னேன்
    மாருட்டப் பேச்சையெல்லாம் மதிக்கச்சொன்னேன்
வழுங்கவல்லோ வாசியைத்தான் வாங்கச்சொன்னேன்
    வஞ்சகத்தை யூடறுத்து மனத்தில்தங்கே. (121)

தங்கடா ஜெகதலத்தி லோடாதையா
    தன்மத்தைச் செய்துவர மறக்காதையா
அங்கடா அங்குஷ்ட மாகத்தானும்
    அழகான மும்மூல மறிந்துசொன்னேன்
பங்கடா பொட்டலர்போற் றிரியவேண்டாம்
    பலபல கற்பமதை யடுக்கவேண்டாஞ்
சிங்கடா சிங்குவையும் பூட்டிநீயும்
    சிவகாமி பாதமதை தினந்தான்போற்றே. (122)

போற்றினேன் புலியூரி லடைச்துச்சென்றேன்
    பொல்லாத கருவிகளைப் போக்கச்சொன்னேன்
ஏற்றினேன் கலைமாறி யிழுத்துக்கொண்டேன்
    ஈசனங்கே வீற்றிருந்த யிடமுங்கண்டேன்
வாழ்த்தினேன் வச்சிரவடி வேலுங்கண்டேன்
    வயிரமணி மேடையிலே மேவிச்சென்றேன்
ஆற்றினேன் அறுகோண வீட்டிலேயும்
    அடப்பருத்து அங்கேயுந்தா னிருந்திட்டானே. (123)

இருந்திட்டேன் சோதியைத்தான் பார்க்கும்போது
யெவராலும் மதிக்கரிது யென்னசொல்வேன்
அருந்திட்டேன் மும்மூலங் கொண்டதாலே
அகசுடரில் சொக்கியினி அருளும்பெற்றேன்
பறந்திட்டேன் பராபரத்துச் சித்தனானேன்
பாவங்க ளானதையும் பறிவாய்க்கொன்றேன்
வருந்திட்டேன் வஞ்சகங்க ளற்றதாலே
வாசிவடி வேயெனக்கு வாய்த்துதென்றே. (124)

வாய்க்குமோ ரசையாத மணிபூரகத்தை
வலுவாக அடுத்தேறி வகையைக்கண்டு
ஏய்க்குமே யென்றுசொல்லி யிருந்திடாதே.
யென்மகனே பூரகத்தி லெண்ணியேறும்
பாய்க்குமே பரியேறி நடத்தச்சொல்லும்
பாசாங்க மானதையும் பகட்டிக்கொல்லும்
வாய்க்குமே ஞானமுந்தான் வந்துகூடும்
வலுவாச்சு தேகமுந்தான் மைந்தாபாரே. (125)

பாரப்பா ஜெகதலத்தி லோடினாலும்
பஞ்சவர்னக் குட்டிகளைப் பணிந்திட்டாலும்
ஆரப்பா தீர்த்தங்க ளாடினாலும்
அடிமுடியும் அரன்பாத மறிந்திட்டாலும்
நேரப்பா மும்மூலங் கொல்லாவிட்டால்
நிச்சயமாய்ப் பரகெதியுங் கிட்டாதப்பா
காரப்பா மும்மூலங் குருவுந்தன்னைக்
கண்டாக்கால் கடத்தேறிக் கொள்ளுவாயே. (126)

கொள்ளவே மும்மூலங் கொண்டபேர்கள்
கோடியிலே யொருவனடா குறித்தேநிற்பான்
அல்லவே யறுத்தாலு முண்ணமாட்டான்
ஆருயிரு மென்று நினைக்கமாட்டான்
நல்லவே வாய்ஞானம் பேசிப்பேசி
நாதாந்தப் பேரொளியில் நாடமாட்டான்
அல்லவே மும்மூலங் கொண்டீரானால்
அரண்முனையிற் சொக்கியினி வாழலாமே. (127)

வாழாமல் போகாமல் மைந்தாசொன்னேன்
மதலையென சொரூபமுந்தான் மதிக்கச்சொன்னேன்
ஆழாம லாண்டுகொள்வா யிந்தமார்க்கம்
அடக்கமுள்ள முனையிலே யறிவாயேறி
நாளாமல் நாள்விழுப்பஞ் செய்திடாதே
நந்திகொலு விருப்பிடத்தில் நாடிச்செல்லு
பாலாநீ பாழாகப் போகவேண்டாம்
பச்சைமயி லேறியுந்தான் பரிகுவாயே. (128)

பரியவல்லோ வேணுமடா சொன்னேனப்பா
பார்தனிலே யிருந்ததிலே பலந்தானேது
அரியவல்லோ மூலமதை யடுத்துக்காரு
யச்சுதங்கள் தெரிந்துநீ அறிவாய்நில்லு
பிரியவல்லோ பிரிதிவியைப் யிடித்துயேறு
பிசகாமல் நந்தியுட பீடங்காணும்
நரியவல்லோ நாகமதை யாண்டுகொள்ளு
நாதாந்தச் சிவமணியை நாடிக்காணே. (129)

காணடா கணக்கான படியுஞ்சொன்னேன்
கயிலாய நாதரையுங் காணச்சொன்னேன்
ஆணடா ஆணவத்தை யடக்கச்சொன்னேன்
ஆயிரத்தெட் டுள்ளமல ரறியச்சொன்னேன்
நாணடா அப்படியே புகுந்துவாழ்ந்தேன்
நந்திகொலு விருப்பிடத்தில் நாடிச்சென்றேன்
நாணடா அண்டரண்டம் புகுந்துவந்து
நாதாந்தப் பேரொளியில் நாடினேனே. (130)

நாடினேன் ஜெகமெல்லாம் பணிந்துகொண்டார்
நாதனென்று ஜெகமெல்லாம் போற்றுமைந்தா
ஆடினேன் ஜெகமெல்லாம் நிறைந்துநின்றேன்
அண்டபரா பரனென்று அருளும்பெற்றேன்
பாடினேனே தலங்களெல்லாம் பரித்துநின்றேன்
பகல்மதியின் மேடையிலே பதிவாய்ச்சொன்னேன்
சூடினேன் வாசியைத்தான் மலராதாகச்
சூரசங் காரமுந்தான் செய்திட்டோமே. (131)

செய்திட்டோ மெவ்வுயிரும் நானுமானேன்
சிவனுக்கு மேலான சிவனுமானேன்
அய்திட்டேன் யவ்வூரி லறிவாய்ச்சென்றேன்
ஆதிமகா மூலமென்று மருளேபெற்றேன்
கைதிட்டேன் கருவூரிற் கடக்கநின்றேன்
கன்மமென்ற பாசங்கள் கடத்திப்போட்டேன்
மெய்த்திட்ட மெய்ஞ்ஞானி குருவுமானேன்
மேலான பதவியிலே மேவினேனே. (132)

மேவியே யெங்குமாய் நிறைந்தோமென்றீர்
மெய்ஞ்ஞான முழுவதையும் பெற்றேமென்றீர்
ஆவியே மும்மூலங் கொள்ளாமற்றான்
அதிசயமாய் சிரஞ்சீவி யருளுமுண்டேன்
தாவியே வாசியதைப் பாராமற்றான்
தனவானே யவனுக்குந் தகைமைசெய்வீர்
ஆவியே அறுமுகமே குருவேசுவாமி
ஐயனே யிந்தவகை யருளுவீரே. (133)

அருளுகிறே மென்மகனே மாணுகேளு
அப்பனே சிரஞ்சீவி யருளேகேட்டீர்
வருளுகிற மும்மூலங் கொள்ளாவிட்டால்
வடிவுள்ள தேகமுந்தான் மாண்டுபோகும்
உருளுகிற சிரஞ்சீவி கேட்டால்நீயும்
உத்தமனே சிரஞ்சீவி வுடைத்துச்சொல்வேன்
அருளுகிற பேரொளியைக் காணுதார்க்கு
அரூபமுள்ள சிரஞ்சீவியாகாதென்றே. (134)

ஆகாத சிரஞ்சீவியின் வயதுகேளும்
அப்பனே அரனுக்கு வயதோசொல்வேன்
வேகாத விஷ்ணுவுக்கு வயதுஞ்சொல்வேன்
பிரமனுக்கு மப்படியே பிரித்துச்சொல்வேன்
நாகாத நாட்டிக்கு வயதுகேளு
நாட்டிலுள்ள ரவிமதிக்கு நாடிச்சொல்வேன்
போகாத பூமிக்கும் வயதுசொல்வேன்
புத்திரனே யென்மகனே பொருந்திக்கேளே (135)

கேளடா பதினெட்டு யுகமாய்நிற்கும்
கெடியாகத் தொண்ணூற் றிரண்டுகேள்
ஆளடா யெல்லோரு மிறப்பாரப்பா
ஐயனே அஷ்டகெஜ மறிந்துபோகும்
காளடா மண்மலைக ளிறந்துபோகும்
நலமான மாந்தரெல்லாம் நாமாவாக
வாளடா மும்மூலங் கொண்டபேர்கள்
வஸ்தான வஸ்தோடே வளருவாரே. (126)

வளருவார் மாயவனு மாண்டுபோவார்
மைந்தனே மகாதேவ ரிறந்துபோவார்
தளருவார் செகமெல்லாந் தகர்ந்துபோகுந்
தானான சிரஞ்சீவியுந் தமைப்பாரப்பா
அளருவார் மும்மூலங் கொள்ளாவிட்டால்
ஆருயிரு மப்படியே மடிந்துபோகும்
அளரவே யிப்படியே திரிந்துதானும்
அல்லோரு மாண்டார்க ளனர்த்தந்தானே. (137)

தானென்ற மும்மூலங் கொண்டதாலுஞ்
சாகாத வஸ்தோடே சார்ந்தேநிற்பார்
ஆனென்ற அரூபவெளி தானுமாவாய்
அழியாத வஸ்தோடே யறிவாய்நிற்பாய்
ஊனென்ற உடல்தானு மழியாதப்பா
ஒருநாளுஞ் சாகாம லுறுதியாவாய்
நானுனு வென்றுகவி பாடினாலும்
நாதாந்தப் பேரொளிவு நட்பைக்காணார். (138)

காணாமல் மாந்தரெல்லா மிறந்துபோனார்
கபடமறச் சொல்லவில்லை கருவய்ாக்கேளு
ஆனான் மும்மூல மெடுத்துக்கொண்டால்
அழியாத வஸ்துவுடன் வஸ்தாய்நிற்பார்
ஊனான வுபத்திரியம் நாடாதப்பா
உலகமெல்லாஞ் சித்துவிளை யாடிக்கொள்வாய்
ஆனான ஆண்பிள்ளை யானாற்கேளு
அம்பலத்தி லெறியாம லறிவாய்க்கொள்ளே. (139)

கொள்ளென்று யென்குருவே குமாரசொன்னீர்
கூறுலகி லெல்லோரு மிறப்பாரென்றீர்
அல்லென்று அண்டமெல்லா மிடியுமென்றீர்
அருபமட்டுந் தானழிய மாட்டாதென்றீர்
வல்லென்று வல்லவன்தா னழிவானென்றீர்
மகாசித்த ரிருக்கின்ற வகையைச்சொல்லும்
நில்லென்று அண்டமெல்லா மிடியும்போது
நிசமான சித்தருட நிலையைச்சொல்வீர். (140)

சொல்லுகிறே னறிவுள்ள குழந்தாய்கேளு
சுயமான சலந்தானுங் கொதித்தபோது
விள்ளுகிற சிவத்தோடே விரிவாய்நிற்பான்
விதமான அக்கினியா யுகந்தபோது
அல்லுகிற அக்கினியாய் வளர்ந்தேநிற்பார்
அப்பனே செகமெல்லா மிறந்துதானால்
வல்லுகிற வஸ்தோடே வளர்ந்தேநிற்பான்
வகையான மும்மூல யோகிதானே. (141)

தானாகித் தானவனாய் வளர்ந்தேநிற்பார்
தவமான மும்மூலத் தருகும்பாலே
வானாகி வான்முடிவும் வளர்ந்தேநிற்கும்
வல்லோரா யென்றைக்கும் வளர்ந்தேநிற்கும்
ஆனாகி யழியாத பொருளாய்நிற்பாய்
ஆயிரத்தெட் டிதழாகு மலருக்குள்ளே
ஊனான முத்தமர்க்கு மும்மூலங்கிட்டும்
உலகத்தி லிதையறிய மாட்டாரென்றே. (142)

மாட்டார்க ளென்றுசொல்லி மதிக்கவேதான்
மண்ணும்விண்ணு மிடிந்துயினி மாளுமென்றீர்
பூட்டாக வஸ்தொன்று அழியாதென்றீர்
பூரணமா யோகியுந்தா னழியாதென்றீர்
நாட்டாக செகமெல்லாம் மடிந்துதானால்
நலமாக படைக்கும்வகை நமக்கேசொல்லும்
காட்டாகக் கருமான மறியச்சொல்லுங்
கரைகாணு துட்பொருளைக் கருவாயுண்ணே. (143)

உண்ணவே யென்மகனே மாணுகேளு
உற்பனமாய்ப் படைக்கும்வகை யுறுதிசொல்வேன்
திண்ணவே தேவியுந்தான் வசத்தில்நின்று
திருநடனம் புரியவுந்தான் வசத்தில்நின்று
நண்ணவே அவள்பதத்தைச் சேர்ந்தேன்யானும்
நலமான பூமியைத்தான் பெருக்கிவாழ்ந்தேன்
அன்னையே அரனையுந்தான் பெருகுவாளாம்
அண்டமெல்லாம் பெற்றுயினி அருளுவாளே. (144)

அருளவே அரனையுந்தான பணிந்துயானும்
ஆத்தாளை அவர்தனக்குப் பாரிசெய்தான்
திருளவே திருக்கண்ணுங் கொடுப்பேன்யானும்
திருமந்திர உபதேசத் தியானஞ்செய்தேன்
அருளவே மும்மூர்த்தி தனைப்படைத்து
அண்டமெல்லாம் அரசாக ஆண்டுகொள்வார்
வருளவே மந்திரங்கள் தனைப்படைத்து
வையகத்தோர் வணங்கும்படி மருவுவாரே. (145)

வணங்கவே ரவிமதியைப் படைத்துத்தானு
மாந்தருக்கு மாய்கைகளைக் கூடச்செய்வார்
இணங்கவே அண்டத்தைக் கோட்டைசெய்வார்
யியலான அறுசுவையை யடுத்துயீவார்
தழுங்கவே பூதகணந் தனைப்படைப்பார்
தானான மேருவென்று தளத்தைச்செய்வார்
அணங்கவே வசுக்களையும் படைத்துத் தானும்
அரனென்று பேராக்கி யருளுவாரே. (146)

அருளுகிற பேச்செல்லாம் யான்தானையா
அவனியெல்லாம் படைத்ததுவும் யான்தானையா
இருளுகிற பேச்செல்லாம் யான்தானையா
யீசனென்று சொல்லுவதும் யான்தானையா
வருகிற வாய்வெல்லாம் யான்தானையா
வையகத்தில் நடப்பதெல்லாம் யான்தானையா
உருளுகிற உற்பனமும் யான்தானையா
உடையவன்தா னென்றதுவும் யான்தானச்சே. (147)

ஆச்சப்பா உருவாகித் திருவுமாகி
அண்டசரா சரங்களெல்லாம் நிறைந்துநின்றேன்
பூச்சப்பா மனமாகி ஒன்றதாகிப்
புவிதனிலே மதிதேய்ந்து ரவியிற்கூட்டி
வாச்சப்பா வாசியென்ற மயிலினலே
வஸ்தான வஸ்தாகி மேலேநின்றேன்
மூச்சப்பா மூச்சற்ற யிடமுங்கண்டேன்
முருகனென்று மெந்தனுக்குப் பேருமாச்சே, (148)

ஆச்சென்று யென்குருவே யறியச்சொன்னீர்
அரன்றனையு மீன்றீ ரதுவுஞ்சொன்னீர்
வாச்சென்று அரனுக்குப் பிள்ளையென்று
வையகத்தோர் சொல்லுகிற வகையைச்சொல்லும்
மூச்சென்று முக்கண்ணர்க் குபதேசித்த
முறையைத்தா னெந்தனுக்கு மொழியவேணும்
வாச்சென்று யிந்தவகை விபரமெல்லாம்
வலுவாக யெந்தனுக்கு வழுத்துவீரே. (149)

வழுத்துகிறே னென்மகனே மாணுகேளு
வல்லவர்க்குப் பிள்ளையென்ற வகையுஞ்சொல்வேன்
அழுத்துகிற ஆத்தாளை அவர்க்கேயீந்தேன்
அதினலே அரனுக்குப் பிள்ளையென்றார்
தொழுத்துகிற அவரையுந்தா னின்றுயானுந்
துய்யவெளி யுபதேசந் துரந்துசொல்லி
வழுத்துகிறே னதனலே ஆசானென்று
அல்லோரு மெனைத்தானு மருளினரே. (150)

அருளினதோர் கூத்தெல்லா மவரேயாகும்
அவனிசரா சரங்களெல்லா மவரேயாகும்
உருளினதோ ருற்பனமு மவர்தானுகும்
உன்வீட்டுக் குள்ளிருக்கு மொளிவுமாகும்
வருளினதோர் வாய்வெல்லா மவர்தானுகும்
வைய்கத்தோர் நடத்தையெல்லா மவர்தானுகும்
உருளினதோ ருலகமெல்லாந் தானேயாகும்
உற்பனமாய் வெட்டவெளி யாச்சுபாரே. (151)

பாரப்பா அண்டசரா சரமுமாகி
பல்லவோர் பாஷைகளாய் நிறைந்துநின்றார்
ஆரப்பா வேதமுந்தா னுலுண்டாக்கி
யவனியெல்லாம் வெவ்வேறு யருளாய்நின்றார்
காரப்பா கருவிகளாய்ப் படர்ந்துநின்றார்
காலனென்று பேராகிக் கபடமானார்
ஆரப்பா அதுவெல்லா மான்மாவாரும்
அண்டமெல்லாந் திருக்கூத்து ஆடினாரே. (152)

ஆடினதோர் கூத்தெல்லா மண்டர்மெச்சி
அருபவெளி யானதிலே அடக்கமானார்
நாடினதோர் கூத்தெல்லா நாதர்மெச்சி
நடனமது புரிந்துவிட்டார் நாதரேதான்
வாடியெங்குந் தேடியே யலைந்திட்டாலும்
வஞ்சகரைக் காணரிது மைந்தாசொன்னேன்
பாடினதோர் மும்மூலம் பகர்ந்துகொண்டால்
பராபரனை யறியலாம் பார்த்துபாரே. (153)

பாரேழு புவனமாய்ப் படர்ந்துநின்று
பஞ்சரத்னக் கூட்டலும் பரிந்தேநின்றால்
ஆரேது அவனிசரா சரமுமாகி
அழகான விஷ்ணுவா யருளாய்நின்றார்
காரேது கயராகி வருணனாகிக்
கண்ணுக்கு மூக்குமத்திற் கருத்தாய்நின்றார்
வரரேது வாலையென்ற சொரூபமாகி
வையகத்தோர் தங்களையு மயக்கினாரே. (154)

மயக்கியே யாசைவலைக் குள்ளேயாடி
மருவியே மாந்தர்களை மயக்கிப்போட்டார்
அயக்கியே யாருயிரு மவருமாகி
அறுமுகவ ரென்றுசொல்லிப் பேருமிட்டு
முயக்கியே மூவுலகு மொன்றாய்நின்ற
முருகனென்று பேருமிட்டு முறைமையானேன்
தயங்கியே தந்திமுகத் தனுவுமானேன்
தாயான சிற்பரையும் யானுமாச்சே. (155)

ஆச்சப்பா ஆறுதல் மையூறுக்குள்ளே
அறிவான ஆண்மை யறிந்துகொண்டேன்
ஏச்சப்பா யிடகலேயின் கலேயிரண்டும்
இயல்பாக வாங்கியினி யிழுத்துக்கொண்டேன்
வாச்சப்பா வாசிவடி வேலுங்கொண்டேன்
மாருத சிரஞ்சீவி வரம்வாங்கிக்கொண்டே
மூச்சப்பா முக்கணனே யமுக்கிப்பார்த்து
முன்னணியா யானுமினிக் கண்டுகொண்டேன் (156)

கண்டபடி காணவென்றால் சொல்லப்போமோ
கருவான மும்மூலக் கருவைத்தானும்
அண்டர்கள் முனிவர்களுந் தேடித்தேடி
ஆத்தாளேப் பூசைசெய்து பேருபெற்றார்
வண்டபடி வரமத்தை யுண்டுகொண்டு
வஸ்தான வஸ்த்துவையும் வாங்கினின்றே
மண்டலீகர் மண்டலங்கள் மனோன்மணியைக்கண்டு
மகத்தான வாசியைத்தான் மாட்டினரே. (157)

மாட்டினர் கும்பகத்தில் மதிக்கச்சொன்னேன்
மாருமலமுதமதை யுண்ணச்சொன்னேன்
பூட்டினேன் புருவமையத் தமர்திறந்து
பொலலாத கருவிகளேப் போகச்சொன்னேன்
ஆட்டினே னண்டாண்ட வெளியிற்குள்ளே
யரும்பொருளா யனுதினமும் வாழச்சொன்னேன்
காட்டினேன் கருவையெல்லாந் திறந்துமைந்தா
கபடத்த பூரகத்தைக் கண்டுகொள்ளே. (158)

கொள்ளடா வெளிதாண்டி ஒளிவுதாண்டி
குமரகுரு பதமான வெளியுந்தாண்டி
அல்லடா அரூபமுள்ள மலரிற்சென்று
ஆயிரத்தெட் டிதழ்மலரை யரிந்துகொண்டு
மெல்லடா மேலான வீட்டிற்சென்று
மேதினியும் நம்மதென்று மேவிக்கொண்டு
வல்லடா வாசியைத்தான் வாசிகொண்டு
வச்சிரவடி வேலுனக்கு வாய்க்கும்பாரே. (159)

வாராத பேச்சையெல்லாஞ் சொல்லவில்லை
வாய்வான சுடரையுந்தான் வாங்கச்சொன்னேன்
தேராத பேர்களுக்குத் தெளிவதேது
தினந்தினந்தான் பார்த்தாலும் வருவதேது
காராத சீஷனுக்கு குருவங்கேது
கைமுறையை விட்டாக்காற் கணக்கங்கேது
நேராத பேர்க்குப்பர கெதிதானேது
நேருமென்றே சற்குருவை நினைத்துப்பாரு. (160)

ஆச்சப்பா கமலபதி மலையிற்குள்ளே
அறிகோடி வருஷமைந்தா அடங்கிநின்றேன்
ஏச்சப்பா நாலான பதவியைத்தான்
எண்ணுமல் வஸ்துவையு மிழுத்துக்கொண்டேன்
வாச்சப்பா வஸ்தான வஸ்துவையும்
வடிவான தும்பைமலர் வடிவைக்கொண்டேன்
ஏச்சப்பா யெங்குமின்ன வெளியாய்நிற்கு
முதுமலர்போல் மதிதனிலே யிருக்கும்பாரே. (161)

பாரடா ரவிமதியைக் கண்ணதாகப்
பலகலையும் நாதமதை மாலையாக
ஆரடா தனித்திருந்த ஆன்மாவைத்தான்
ஆயிரத்தெட் டிதழ்மலரை யறிவிற்கண்டாய்
நேரடா அவருடைய நிலையைப்பார்த்தால்
நேரமொரு வர்ணமாய் நிலையாக்காட்டும்
ஆரடா அவருடைய வடிவைத்தானும்
யாராலு மறிந்துயினிச் சொல்லப்போமோ. (162)

சொன்னேனடா பூரணமே வெளியதாகச்
சொரூபமா யிருக்கின்ற நிலையுஞ்சொன்னேன்
அண்ணலடா அவருடைய வடிவைச்சொல்வேன்
ஆன்மாவாய் நிறைந்திருக்கு மறிவுஞ்சொன்னேன்
நண்ணடா நாற்பத்துக் கோணஞ்சொன்னேன்
நாலைந்து வாசலையு மடைக்கச்சொன்னேன்
விண்ணடா விஷ்ணுவுட விபாஞ்சொன்னேன்
விதிபுக்கும் வகைகளெல்லாம் வீசினேனே. (163)

வீசினே னிம்மார்க்கம் பாராமற்முன்
விடமாக சமையத்தோர் மேவிக்கேட்டார்
ஆசியே வாசியைத்தா னடுத்தேகண்டார்
அழகான மும்மூல மறிவாய்க்காணுர்
தூசியே யீனனென்று சொல்லியல்லோ
தூளாகிச் செத்தவர்கள் துலையாதப்பா
ஆசியே மும்மூலங் கொள்ளாமற்முன்
அழகான சமையத்தோர் ிறந்திட்டாரே. (164)

இறந்திட்டா வீனமென்று சொல்லிமைந்தா
யிடும்பாலே சமையத்தோ ரிறந்துபோனுர்
அறைந்திட்ட மும்மூலங் கொள்ளாப்பேர்கள்
அருபவெளி தன்னையுந்தா னறியமாட்டார்
நிரைந்திட்ட மும்மூலங் கொண்டானுகில்
நிசமான ஆன்மாவை நிலைக்கக்காண்பான்
பரந்திட்ட பராபரத்தைப் பிடித்தேயேறிப்
பாய்ந்துமயில் மீதேறிப் பரிவுவாயே. 165)

பரியவா யிணக்கமாய்ச் சொன்னதெல்லாம்
பாலகனே வுனக்காகப் பற்றிச்சொன்னேன்
அறியவடா அடிமுடியுந் தெரியச்சொன்னேன்
ஆயிரமுழக் கம்பத்தி னுதிசொன்னேன்
பிரியவடா கருவிகளை நீக்கச்சொன்னேன்
பேசாத வஸ்துநிலை பிரித்துச்சொன்னேன்
வரியவடா வாசியுட நுணுக்கஞ்சொன்னேன்
வாய்வான சுழல்தனிலே வருந்திநில்லே. (166)

நில்லடா ஒருமனதாய் நிலையில்நின்று
நீசனென்ற காலனையும் நிகழ்த்திப்போடு
அல்லடா கேசரியாள் மவுனம்வாய்க்கும்
ஆயிரத் தெட்டுமேல ரழகாய்க்காணும்
வல்லடா கருவூரில் வளாந்தேநிற்பாய்
வாய்ப்பான வயிரத்திரு விளக்கைக்காண்பார்
இல்லடா யீராறு தலமுந்தோணும்
இந்திரகிரி பருவதத்தி லிருக்கலாமே. (167)

இருக்கலாம் அநேகநாள் மட்டுமைந்தா
இயலான வஸ்துவுந்தா னிருக்குமட்டும்
பெருக்கலாம் பிரணவத்தோ டாரெழுத்தும்
பிசகாம லுன்மனையில் பிலத்துப்போகும்
அருக்கலா மழகான கெதியைக்கூட
அசுரர்கிளை தங்களையு மறுத்துப்போடும்
நெருக்கலாம் பரகெதியும் நிறைந்தேகாணும்
நிட்சயமா யான்மாவில் நிலைக்கலாமே. (168)

நிலைக்குமோ நிலையாது வென்றுநீயும்
நின்றக்கால் வாரிவிடும் விலைக்கெட்டாது
தலைக்குமேற் சுடரான வாய்வுதங்கி
தந்திதனி லேரியுந்தா தயவாய்நின்று
அலைக்குமே நாணேற்றி யறுத்துக்கொண்டு
அருபவெளி தன்னிலே அறிவாய்ப்பாய்ந்து
மலைக்குமே மலையேடு மகேந்திரஞ்சுத்தி
மதளையா யனுதினமும் வாழுவாயே. (169)

வாழுவே மதளையா யிருந்தேன்யானும்
மனோன்மணியா ளமுதத்தை வாங்கியுண்டேன்
ஆளவே யறுமுகமாய்ப் படர்ந்துநின்றேன்
அச்சுதன் மருகனென்று அருளும்பெற்றேன்
நாளவே நாள்வளப்பஞ் செய்யாமற்றான்
நலமான மும்மூலம் நாடிக்கொண்டேன்
ஆளவே யமுதந்தான் பொசித்தேனையா
அடங்காத சித்தனென்று மருளினரே. (170)

அருளின ரென்றுசொல்லிச் சொன்னீரையா
அறுமுகமே யேகவெளி யகண்டநாதா
வருளினதோர் மும்மூல வகையுஞ்சொன்னீர்
வாய்வான சுடர்தனையு முழங்கச்சொன்னீர்
தருளினதோர் தாய்பதத்தைப் போற்றச்சொன்னீர்
தமர்க்கிளையுந் தங்களையு மறுக்கச்சொன்னீர்
அருளினதோர் நாளையுந்தா சர்வர்க்கெல்லாம்
அமைததபடி காணுங்குறியை அறைகிறேனே. (171)

அறைகிறே னென்மகனே மாணுசேளு
அப்பனே வாளேமுதல் சர்வோர்க்கெல்லாம்
நிறைகிறேன் காலனென்ற நிழல்தானப்பா
நிட்சயமாய்க் கூத்தாட்டம் நிதானங்காட்டும்
வரைகிறேன் அதையறிந்து மைந்தாநீயும்
வகையான மும்மூலம் வழியாக்கொண்டால்
நிறைகிறே னவனுயிரும் போகாதப்பா
நிச்சயமாய்ச் சொல்லுகிறே னினிவாய்த்திரே. (172)

தீர்க்கமாய் மும்மூலந் தினந்தோறுந்தான்
தின்னுமல் விடாதேஐயா திடமாய்ச்சொன்னேன்
ஆர்க்குமடா அவனுயிரும் போகாதப்பா
அகண்டவெளிக் குள்ளிருந்து ஆடச்சொன்னேன்
மார்க்மடா மரகதத்தால் வடிவைக்காண்பாய்
மாருத சிரஞ்சீவி மகிமையாவான்
கார்க்கவல்லோ காமமுந்தா கட்டப்போகும்
கயிலாய நாதரையுக் காணலாமே. (173)

காணலாங் காலனென்ற நிழல்தான்சாகும்
கருவியென்ற தத்துவமுங் கழன்றுபோகும்
ஆணலாம் வெண்சாரை யடித்துக்காண்பான்
அரூபவெளி தன்னிலே யடக்கிக்கொள்வான்
நாணலாம் நாதமணி கட்டிப்போகும்
நந்திகொலு விருப்பிட்டமும் நாடிக்காணும்
பூணலாம் புஷ்பராக மலேயிலேறிப்
பொல்லாப்பு வானத்தையும் போக்கலாமே. (174)

போக்கவே யிப்படியும் வகையுஞ்சொன்னேன்
போகாத வினேகளேயும் போகச்சொன்னேன்
ஏக்கவே யீராறு தலத்தைகாண
யிதமாகப் புத்தியுந்தா னெடுத்துச்சொன்னேன்
கார்க்வே காமத்தைக் கட்டச்சொன்னேன்
கபாலந்தான் திறக்கிறதோர் தடமுஞ்சொன்னேன்
தீர்க்கவே திரிபுரையைக் கண்டுகொண்டு
தெளிவான சித்தனென்று தெரிந்துக்கொள்ளே. (175)

கொள்ளடா வெளிதாண்டி யொளிவுதாண்டிக்
குறையாத பேரொளியிற் கூட்டிக்கொள்ளு
அல்லடா அஷ்டாங்க நிலையுங்காணும்
ஆயியென்ற மவுனமதை யடக்கிக்கொள்ளும்
நில்லடா நிட்சயத்தைப் பத்திநீங்கள்
நித்திரையைப் போக்கியுந்தா னினைவாய்வாழ்ந்து
வல்லடா வல்லவனு யிருந்தீரானல்
வயிரமுள்ள திருவிளக்கு வாய்க்குந்தானே. (176)

வாய்ப்பாகச் சொல்லிவைத்தேன் மனதிறங்கி
வஸ்தான வஸ்திலேயும் வளரச்சொன்னேன்
ஏய்ப்பாகச் சொல்லவில்லை யிந்தமார்க்க
மிடும்பாலே மாண்டாக்கா லென்னசொல்வேன்
காப்பாகக் காலனையுங் கட்டறுத்து
கயிலாய மேருவையுங் கடந்துநில்லு
பாய்ப்பாகப் பாய்ந்துநீ பரியிலேறிப்
பராபரத்தைப் பூசித்துப் பற்றுவாயே. (177)

பற்றியே வாசியுந்தான் பதறியோடும்
பங்குபங்காய்க் கருவியெல்லாம் பாய்ந்துபோகும்
அற்றவே ஆருரி லடங்கிப்போகும்
அரமான தர்மமுந்தா னவர்க்கேவாய்க்கும்
பெற்றபே ரிப்படியே யானும்பெற்றேன்
பிலத்தாங்கி பீடத்திற் சேர்ந்துநின்றேன்
அற்றபின் னருனரகந் தன்னையறுத்தேன்
அதினாலே யாறுமுக னென்றுபேரே. (178)

போகி ஊராகிப் பெரிதுமானேன்
பேசாத வஸ்துவாய்ப் பிலத்துநின்றேன்
ஆராகி யறியாகி யயனுமாகி
அண்டசுவர் தன்னையுந்தா னடுத்துத்தாண்டி
நேராகி நிறையாகி நிர்மதியுமாகி
நிமலனென்று பேரெடுத்து நிசமாய்நின்றேன்
காராகி கயிலாய கிரியுமாகி
கடம்பவனத் தையனென்று கருதினரே. (179)

கருதினார் கந்தனென்னைக் கண்டுமெச்சிக்
கரைகாணாப் பேரொளியைக் காட்டிநின்றார்
உருகினா ருள்முனையி லொளிவாய்நின்று
ஓங்காரக் கப்பத்தி லொடுங்கிநின்றேன்
அருளினா ராசனமு மணியுமீய்ந்தார்
அடிபணிந்து காதிலிரு குழையுமிட்டார்
கருதினார் கந்தனென்று பேருமிட்டுக்
கபடற்ற சித்தனென்று கருதினாரே. (180)

கருதினா ரெனைப்போல கண்டாருண்டோ
கபடற்ற வாயலையுங் கண்டாருண்டோ
அனுதினமு மும்மலத்தை யறுத்தாருண்டோ
ஆருயிரும் நாமென்று நினைப்பாருண்டோ
வருதியென்ற வாசியைத்தா னறிவாருண்டோ
வஸ்தான வஸ்தில்நின்று வாழ்வாருண்டோ
சிறிதுநாள் யானும்போ யலைந்தேயானுந்
தேவியுட கிருபையினா லறிந்திட்டேனே. (181)

அறிந்திட்டே னன்மாவை யானுமைந்தா
அழகான படுகுழியைத் தள்ளிப்போட்டேன்
திறந்திட்டேன் மெய்ச்சுடரிற் சொக்கியானுந்
துய்யமென்ற வெளியேறித் தொடர்ந்துகண்டேன்
வருந்திட்டேன் வாசியென்ற குதிரைமீதில்
வாய்ப்பாக யேறியுந்தான் மகிமைகண்டேன்
முறிந்திட்டே னுறமுறையார் தன்னைவிட்டு
மூக்கியமாய் மும்மூலங் கொண்டிட்டேனே. (182)

கொண்டதினாற் குருவாக்கிக் குமாரனாகி
குறையாத பொருளதனிற் கூடிக்கொண்டேன்
அண்டதினா லரூபமென்ற வெளியுமானேன்
ஆன்மாவே யானாகி யருளும்பெற்றேன்
வண்டபடி வண்டர்களை வதைத்துப்போட்டேன்
வாசிவடி வேலையுந்தான் வாங்கிக்கொண்டேன்
தண்டபடி தாய்பதத்தில் தனுவும்பெற்றேன்
தமர்திறக்கும் வாசலையுங் கண்டிட்டேனே. (193)

கண்டபடி யேழுகட லமுர்தங் கண்டேன்
கனமான மக்ஷங்களைக் கரைத்துப் போட்டேன்
அண்டபடி யக்கடலி லடுத்துச் சென்றேன்
ஆசானை யக்ஷணமே யறிந்து கொண்டேன்
மண்டபடி மனமுருகி மனந்தளர்ந்தேன்
மாராட்டப் பேச்சையெல்லா மதிக்கப் பெற்றேன்
தொண்டர்படி தொண்டுபண்ணி நிலைத்துக்கொண்டேன்
துவாதசாந்த வீதியிலே சொக்கினேனே. (184)

சொக்கியே யிருக்கையிலே வாதவூரிற்
சுணங்கனென்ற நாய்பதத்தைச் சூழ்ந்து கொண்டேன்
அக்கினியாய் மரத்தினிலே பாலுமுண்டேன்
ஆயிரத்தெட் டிருள்பசும்பொன் னழகுமாச்சே
முக்கியமாய் மூவுலகு முருவிநின்றேன்
முச்சுடராய்த் தேகமுந்தா னொளிவுமாச்சு
பக்கியே பராபரையைச் சேணமாக்கிப்
பத்மாச னையுங்குடி யாக்கினேனே. (185)

படியாக்கிக் கடிவாளங் கணேச னாக
பருத்ததோர் மயில்மீதி லேறிக்கொண்டேன்
படியாக்கி அண்டபரா பரங்களெல்லாம்
பாய்ந்தேதான் கவனமாய்ச் சுத்திவந்தேன்
அடியாக்கி பூமியைத்தான் மைந்தாயானும்
அண்டரண்ட வெளியைப்பர சிரசதாக்கி
குடியாக்கிப் பூதலத்தில் மாந்தர் தன்னைக்
குரத்தியுட கணவனென்று கூறப்பெற்றேன். (186)

கூறாகிக் குறையாத பொருளுமாகி
குலகார னென்றுசொல்லிக் கூறும்பெற்றேன்
ஆராகி யவனியெல்லாந் தெய்வமாகி
ஆறுமுக மாகியெங்கும் அருளேகொண்டேன்
நேராகி நிலையாகி நிச்சயமுமாகி
நீங்காம லெவ்வுயிரும் யானுமானேன்
மாறாகி மன்மதசொ ரூபமாகி
மரகதமா யனுதினமும் வாழ்ந்திட்டேனே. (187)

வாழ்ந்திட்டேன் தெய்வசபைக் குரவன்யானும்
வள்ளியெனுந் தேவிக்கு மணாளனானேன்
தாழ்ந்திட்ட நந்திக்குத் தமதியானேன்
தாயான சிற்பரைக்குப் பிள்ளையானேன்
ஆழ்ந்திட்ட அறனுக்குப் பிள்ளையானேன்
அல்லோர்க்குந் தெய்வமாய் அறிவாய்நின்றேன்
காய்ந்திட்ட காலனுக்குக் கர்த்தனானேன்
கண்டவர்க்கு மெய்ஞ்ஞானங் கருதுவோமே. (188)

கருதவே யிதனாலே யானுமைந்தா
காரணசற் குருவினுட கருத்தினாலே
அருந்தவே மும்மூலங் கொண்டதாதே
அரனுக்குப் பிள்ளையென்றுந் தகப்பனானேன்
வருந்தவே வாய்வினுட விளக்கத்தாலே
வயிரத்திரு விளக்கையுந்தான் வசமாய்க்கண்டேன்
திருந்தவே திரிபுரையின் கிருபையாலே
தீயான அக்கினியிற் சேர்ந்திட்டேனே. (189)

சேர்ந்திட்டேன் அக்கினியிற் சொக்கிவாழ்ந்தேன்
தீர்த்தங்க ளானதையுந் திடமாய்க்கண்டேன்
தாழ்ந்திட்டே னப்புறமும் மேலேசென்றேன்
தமர்திறக்கும் வாயலுட தயவும்பெற்றேன்
தாழ்ந்திட்டேன் சுத்தசல மங்கேகண்டேன்
வாய்வான யோகத்தை வழிவாய்க் கண்டேன்
ஆழ்ந்திட்ட அண்டசுட ரழகுதன்னை
ஆராலும் சொல்லரிது ஐயாபாரே. (190)

பாரென்று என்குருவே யிப்படியுஞ் சொன்னீர்
பலபல பேச்சுகளாய்ப் பகடஞ்சொன்னீர்
தாரென்று யோகநிலை யறியச்சொன்னீர்
தமர்திறக்கும் வாயல்தனைக் காணச்சொன்னீர்
ஆரென்று சுத்தஜல மறியச்சொன்னீர்
அதிசயங்க ளுள்ளதெல்லா மறிவாய்ச்சொன்னீர்
காரென்றீர் எனதிடத்தி லிருக்கயானுங்
கடவுளே எந்தனுக்கு கருதுவீரே. (191)

கருதுகிற யென்மகனே மாணுகேளு
காலனுட தேசமடா தெட்சணந்தானப்பா
அருதுகின்ற பொதிகைமலே சார்வுமுண்டு
அத்தேச மோடாக வுயர்ந்தேநிற்கும்
வருதுகின்ற அம்மலேயி லிருந்துவாழ்வாய்
மாறுத சிரஞ்சீவியாய் வாழ்ந்தேநிற்பாய்
தள்ளுகிற அங்குஷ்டத் தனுவுமாவாய்
தற்பரம்போல் வடிவாகித் தானிற்பாயே. (192)

தானுகி நீயாகி தானுமாவாய்த்
தந்தைபோல லனுதினமுந் தாய்போல்நிற்பாய்
ஆணுகிப் பெண்ணுகி அளவுமாய்
அவனியுள்ள சித்தர்கள்தா னடுத்துசெல்வார்
ஊனுகிச் சித்தரெல்லா முன்னேக்கண்டு
உறுதியாய்ப் போற்றிசெய்து யொடுங்கிவாழ்வார்
வானுகி வானவர்கள் போற்றுவார்கள்
வல்லவர்தா னனுதினமும் வந்திடுகுவாரே (193)

வந்திடுவார் முனிவரெல்லாம் வணங்கிநிற்பார்
வாய்ப்பான மாந்தரெல்லாம் வணக்கஞ்செய்வார்
தந்திடுவா கிம்புருட ராடல்செய்வார்
சதகோடி ரவிபோலே தானுய்நிற்பார்
விந்திடுவார் விமானமென்றே வாசியேறி
வீற்றிருப்பா யனுதினமும் விலகாமற்றுன்
நந்திடுவார் நந்தியிலே நாடிநிற்பாய்
நாலேந்து வாயலேயு மடைத்துக்கொள்ளே. (194)

கொள்ளடா முன்சொன்ன மூலமுண்ணு
குறையாது ஆயிசு கூர்ந்துபாரு
அல்லடா அணுவளவும் விட்டிடாதே
அகஸ்தியனே புத்தியா யறிவாய்நில்லு
வல்லடா வல்லத்துக் கோட்டைக்குள்ளே
வஸ்தான பராபரமும் வாய்ப்பாய்க் காணும்
நில்லடா நிட்சயத்தில் நீயும்நில்லு
நீங்காதே வஸ்தோடே நிலேத்துநில்லே. (195)

நில்லடா ஒருநிலையாய் நிருத்திநீயும்
நின்றக்கால் சிவயோகம் நெடுநாள்நிற்கும்
அல்லடா ஆருயிருந் தான்றனென்றும்
ஐயனே அனுதினமும் நினைக்கவேணும்
வல்லடா வல்லவனு யிருந்து கொண்டு
வையகத்தோர் தங்களையு மதிக்கப்பெற்று
செல்லடா சிகாரமென்ற நெல்லியுண்ணு
தீவினைகள் தானகற்றி திடமாய்நில்லே. (196)

நில்லடாவாசியைத்தான் வாங்கிகொள்ளு
நீங்காத கருவிகளை வைத்ததப்போடு
அல்லடா யெனைப்போல ஆசானையா
அப்பனே யுந்தனுக்கு வாய்க்காதப்பா
சொல்லடா சிவஞானந் தன்னைத்தேர்ந்து
சொற்பெரிய முமுட்சுதன்னைப் போற்றிசெய்து
செல்லடா சிவஞானக் கருவுக்குள்ளே
தினந்தினந்தான் பணிந்துயினி திடமாய்நில்லே. (197)

நில்லடா சகலகலை ஞானச் சொன்னேன்
நீங்காத மும்மூலை நிலையுஞ்சொன்னேன்
அல்லடா ஆதிவஸ்த யறியச்சொன்னேன்
அடங்காத சித்தமென்று ஆடச்சொன்னேன்
வல்லடா யோகத்தின் வகையுஞ்சொன்னேன்
வஸ்தானமும்மூலங் கொள்ளச்சொன்னேன்
அல்லடா அதையெடுத்து பூசைசெய்து
அடங்காத ஆன்மாவி லடங்கிநில்லே. (198)

நில்லென்றே லோகமெல்லா முனக்கு சித்தி
நேரான பூலோகம் நெருங்கியாடும்
வல்லவன்றன் செயல்விட்டால் மார்க்கமில்லை
வாலைதனை யடிபணிந்து மவுனங்கொள்ளு
கொள்ளுகிற வாசியின்றன் குறியைக்கேளு
குவலயத்தில் செய்கின்ற மார்க்கந்தன்னை
விள்ளுகிறேன் மகாரமென்ற நிறைவுண்ணு
விதிவிலக்கி வாழலா முண்மைசொன்னேன். (199

சொன்னசொல் தவறாமல் நிலையில்நில்லு
　　சோதினையாய்த் தோன்றிடுமே துவாதசாந்தம்
வின்னம்வரு மவுனத்தை விட்டிடாதே
　　மேதினியோர் கருத்தறிந்து விவரச்சொல்லு
சொன்னதோர் கற்பமதை விவரஞ்சொல்லு
　　தோன்றுமடா உகாரமென்று மும்மூலந்தான்
திண்ணமான சிகாரமென்ற நெல்லியுண்ணு
　　திரமாக வாலையடி நிச்சயங்கொள்வாயே. (200)

நிட்சயமா யிப்படியே முறையைச்சொன்னேன்
　　நெடுநாளாய் வாழவென்று நிதானஞ்சொன்னேன்
அட்சரமா யென்னுடைய இருநூற்றுக்குள்ளே
　　அடங்காத கருவையெல்லா மடக்கிப்போட்டேன்
பட்சமாய் பராபரத்து நிலையுஞ்சொன்னேன்
　　பாய்ந்துமயி லேறுகின்ற மகிமைசொன்னேன்
அட்சயமா யதையறிந்து மவுனங்கொள்ளு
　　அகஸ்தியனே ஞானமிரு நூற்றுமுற்றே. (201)

சுப்பிரமணியர் ஞானம் உ௱,

முற்றிற்று.

காந்தசத்தி வைத்திய சாஸ்திரம்.

இப்புஸ்தகமானது, ஐசுவரியம், ஆரோக்கியம், ஆனந்தம் செல்வாக்கு ஆகிய இவைகள் நிறைந்துள்ளபேரறைகளைத் திறக்க வல்ல

ஓர்மந்திரம் போன்றது. இந்நூல், இன்ன காரியங்கள் இன்ன இன்ன காரணங்களினால் செய்ய வேண்டிய தவசிய மென்றும் அவைகளை இன்ன இன்ன விதமாகச் செய்யவேண்டு மென்றும்விவரமாகத் தெரிவிக்கிறது. ஔஷதப் பிரயோகமின்றிப் பிணிகளைத் தீர்க்கும் சக்தியை யளிக்கக்கூடியது. ஒருவனை நித்திரை போன்ற மயக்கமடையச் செய்வதற்கு உரிய வழியையும் வியாதிகளையும் இந்நூல் தெரிவிக்கிறது. நரம்புகளினால் உண்டாகும் குத்துவலி, வயிற்றுவலி, மலச்சிக்கல், தலைவலி, நரம்புக்குத்தல, பல்வலி, வாதரோகம் முதலிய பலவியாதிகளையும் காந்தசத்தினால் ஸ்வஸ்தமாக்கலாம். புஸ்தகம் முழுதும் படங்கள் அடங்கியது.

இதன் விலை ரூபா. 1 0 0

ஸத்வைதிய ஜீவனம்.

இது நூதனமாய் கற்பிக்கப்பட்டதல்ல! பலநூர்களினின்றும் கைப்புரட்டு செய்ததுமல்ல !! உதவாத ஆபாச பொய்யான முறைகளடங்கியது மல்ல !!! அநேக நூற்றாண்டுகளுக்கு முன் "லோலம்ப ராஜா" என்னும்மகரிஷியால் வடமொழியில் (ஸமஸ்கிருதம்) இயற்றப்பட்டது வடமொழி நூல்களில், சரகம், சுஸ்ருதம் பாகடம், பசவராஜீயம், சிந்தாமணி முதலிய வைதிய சாஸ்திரங்களே தலைமையால் விளங்குவன; அவையெல்லாம் மிக விரிவாய் இருத்தலினால் அவற்றின் முக்கியமான—அருமையான—முறைகளை மாத்திரம் ஒருசேரத்திரட்டியதாகும். இந்தவைதிய சாஸ்திரத்தில் சகலவித நோய்களின் நாடியும், குணமும், மிகச் சுலபமாய்த் தெரிந்துகொள்ளும் வழியும் ஒவ்வொரு நோய்க்கும் பலவிதமான சிகிச்சைகளும் சொல்லப்பட்டிருக்கின்றன. விலை அணா 8.

கனகசாஸ்திரம்.

கஸ்தூரி, குங்குமப்பூ, பச்சை கற்பூரம், சாம்பிராணி தூரிசில் செம்பெடுக்கு முறை செமபை தம்பாக்கு செய்யுமுறை, கெம்பு மூத்து, ரசமணி அயமணி, பெருங்காயம் பன்னீர், ஓமவாட்டர், சோம்பு வாட்டர், மீன் வெண்ணெய், தேங்காய் வெண்ணெய், பாதாம் வெண்ணெய், மிளகு, பூண்டு, இஞ்சி புளிப்பு முதலியன செய்யுமுறைகள் விபரமாக எழுதப்பட்டிருக்கின்றன. விலை அணா 12.

த. துரைசாமி முதலியார்.

நெ. 23, பாளையப்பன் தெரு, மின்ட் போஸ்டு, மதராஸ்.

வைத்தியராஜ சிந்தாமணி.

தஞ்சைமாநகரம்.

ஹிஸ் ஐனெஸ் இராஜ ஸ்ரீ சத்ரபதி

சாபோஜி மகாராஜா சஹேப் அவர்கள்

தன்வந்திரி மாலில்சுவய அனுபவசித்த மாய்த்திரட்டி மஹாராஷ்ட்டிரபாஷையில் எழுதிவைக்கப்பட்டது. ஷெ மகாராஜா அவர்கள் தௌத்திராகிய கல்லியாணமால் ஸ்ரீ யோகநாத ஆவரரோவ் சஹேப்அவர்களால் தமிழில் மொழி பெயர்பித்தது இதில் தயில வகைகள் கியாழவகைகள் சூரணவகைகள் இன்னு மனேக வகைகள் இதில் அடங்கியது.

1-வது பாகம் 1-க்கு ரூபா 1 0 0

விஷவயித்திய சிந்தாமணி.

அஷ்டநாகங்கள் வசிக்குமிடம், அவைகளின் பரிமளக்குறி, பட்டின் குறி, ஆடுங்குறி, கடியின்குறி, விஷத்தின் அளவு, சாத்தியா சாத்தியம், அவுடதம், கலிக்கம் மூலிகைப் பிரயோகம், புகை, மாத்திரைக்கோல் முடிக்கயிர், மந்திரம் முதலான சகல சிகிச்சையும், எலி-பெருச்சாளி - பல்லி அரணை ஓணான்-பூனை-நாய்-வண்டு முதலியவற்றின் விஷத்துக்கு அவுடத முறைகளும் அச்சிடப்பட்டிருக்கின்றன.

இதன் விலை அணா 12.

வைத்திய சிகாமணி.

சீர்மையென்னும் லண்டன் பட்டணத்தில் அச்சிட் டிருந்த பாக்கெட்சயிஸ் பிரஸ்கிரிப்ஷன் புத்தகத்தைக் கொண்டு தமிழ்ப் பாஷையில் மொழி பெயர்த்து இத்துடன் இந்து சமஸ்தான ஆயுர்வேத முறைகளையும் சிலவற்றை சேர்க்கப்பட்டு 1000-ஆயிரம் முறைகள் ஒரேபுத்தக ரூபமாய் ஒருபக்கத்தில் இங்கிலீஷ் பாஷையிலும் அதற்கு நேர்பக்கத்தில் தமிழ் பாஷையிலும் அச்சிட்டிருப்பதால்இங்கிலீஷ் அல்லது தமிழ் இருபாஷையிலும்ஆண்டனுபவிக்கலாம். மேற்படி முறைகள் ஒவ்வொன்றையும் எந்த டாக்டர்கையாண்டிருந்து உண்மையான தென்று வெளியிட்டிருந்தனரோ அவர்களின் பெயரை அந்தந்த முறைகளின் பக்கத்திலேயே அச்சிடப்பட்டிருக்கின்றன.

விலை ரூபா 3 8 0

த. துரைசாமி முதலியார்.

நெ. 23, பாளையப்பன் தெரு, மின்ட் போஸ்டு, மதராஸ்.

உ

பரம்பதி துணை.

தேவரிஷி முனி சித்தர்கள் திருவாய்மலர்ந்தருளிய

வைத்திய வாத யோக ஞான

ஞான சாஸ்திரத்திரட்டு.

முன் கூறப்பட்டிருக்கும் சுப்பிரமணியர் ஞானம் இருநூறில், அனேக யிடங்களில் ஒவ்வொரு விஷயங்களை மறைப்பாகவும் மன திற்கு நன்கு புலப்படாமலும் கூறியிருப்பதைத் தெளிவாய்த் தெரிந்து கொள்ளவேண்டுமானால் மேற்கூறிய வைத்திய வாத யோக ஞானசாஸ்திரத்திரட்டு இதுவரையிலும் அச்சிட்டு வெளிவராத அரிய சாஸ்திரங்களாகவும், ஒவ்வொரு விஷயங்களையும் வெகு தெளிவாய்த் தெரிந்து கொளவதற்கேதுவான மறைப்பில்லாத சாஸ்திரங்களாகவும் அனேக தேசங்களிலுஞ் சென்று ஓலையேட்டுச் சுவடிகள் கிடைக்கப் பெற்று, அனேக மகான்களைக்கொண்டு சீர்திருத்தஞ்செய்து திக்குக் கடிதத்தில் சுத்தப் பிரதியாகப் பிழையறப் பரிசோதித்து 10-பாகங்களாக அச்சிட்டிருக்கிறது.

ஷை பத்துபாகங்களையும் வாங்கி வாசித்துணரின் ஒவ்வொரு விஷயங்களையும் எளிதிற் றெரிந்துகொள்வற் கேதுவாகும். ஆதலாலொவ்வொருவரும் இந்த பத்துபாகங்களையும் வாங்கி வாசித்து ஞானசித்தி பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

பாகம் 1-க்கு விலை ரூ 1—4—0

வைத்திய வாத யோக ஞான சாஸ்திரப் புஸ்தகங்களும் இன்னும் வேண்டும் புஸ்தகங்களுக்கும் அடியிற்கண்ட விலாசதாரிடம் நேரிலும் வி. பி. மூலமாயும் பெற்றுக் கொள்ளலாம்.

சாஸ்திரங்களின் விபரந் தெரிய விரும்புவோர் அரையணா லேபில்அனுப்பி அடியிற்கண்ட விலாசதாரிடம் புஸ்தக கிரயஜாபித கேட்லாக் பெற்றுக்கொள்ளலாம்.

இப்படிக்கு,

த. துரைசாமி முதலியார்.

நெ. 23, பாளையப்பன் தெரு, மின்ட், போஸ்டு, சென்னை.

வெளிவந்து விட்டது!!   வெளிவந்து விட்டது!!

மகாமகத்துவம் பொருந்திய

போகர் 7000-பாடல்.

மஹா மகிமை வாய்ந்த சித்தர்களும், நாற்பத்தெண் முனிவர்களும் நவகோடி ரிஷிகளும் ஜ[illegible]ளின்பேரில் உள்ள காருண்யத்தால் 21-இலட்சம் கிரந்தங்கள் செய்தருளினர் ஒவ்வொருகிரந்தத்தினும் அநேக ம[illegible]துவங்கள் நிறைந்தன போகர் சப்தகாண்டமாகிய இந்நூலில் அநுபவ வைத்திய முறைகளும் வாத முறைகளும், சரக்குகளின் கட்டுகளும் பற்பங்களின் முறை உப்புவகைகளின் கட்டுவகைகளும், பாஷாண வகைகளும் போகர் தமது சமாதிகளில் விளங்கியதும் இத்துடன் விரிவாக எழுதுவதற்குஇடம் தாராமையால் இத்துடன் நிறுத்துகின்றனம் இதன்விபரம்முழும் புஸ்தகத்தின் விஷய அட்டவணையில் விபரமாக காண்க. விலை ரூபா 4.

நீங்கள் சுதேச வைதியராக வேண்டுமானல்,

அநுபோக செய்முறை
பாக்கெட் வைத்தியத்தை பார்க்கவும்.

இதில் நமது சித்தபுருஷர்களின் அநுபோகத்தில் வந்த ஔஷத முறைகளை அநேக ஆண்டுகள் தொண்டுசெய்து நமது முன்னோர்கள் அறிந்து அதனை அநுபோகத்தில் கையாடி வந்த சுமார் 800-முறைகளை திரட்டி லோகோபகாரமாக சுதேச வைத்தியர்களின் சகாயத்தின் நிமித்தம சொக்காய் பைக்குள் அடங்கக்கூடிய பாக்கெட் அளவில் புதிதாக அச்சிடப்பெற்றது.

இதன் விலை ரூபா 1.   (தபால் சார்ஜ் வேறு)

போகர் ஜனனசாகரம்	0	10	ஷை 200-பாடல்	0	8
போகர் 700-பாடல்	0	10	ஜீவரக்ஷாமிர்தம்	7	8
அகஸ்தியர் வயித்திய காவியம் 1500-பாடல்	1	0	வயித்தியசார சங்கிரசம்	1	4
ரோமரிஷி வயித்தியம்	[illegible]	10	ஷை திக்கு	2	0
போகர்பெருநூல் 1200-பாடல்	[illegible]	[illegible]	பதார்த்தகுணசிந்தாமணி	1	4
சிகிச்சாரத்தின்தீபம்	2	0	வைத்தியகோர்வை	1	8
கண்ணுசாமியம்	2	0	கொங்கணர் கடைகாண்டம் 500-பாடல்	0	8
ஞானவெட்டியான்மூலம்	1	0	தன்வந்திரி நிகண்டு 300	0	8
ஷை மூலம் உரை	2	8	தன்வந்திரி தயிலம் 500	0	8
சுப்பிரமணியர்ஞானம்500	0	12	தேரையர்வயித்தியம் [illegible]-பாடல்	0	12

த. துரைசாமி முதலியார்.
நெ. 23, பாளையப்பன் தெரு, மின்ட் போஸ்ட், மதறாஸ்.